

# ஆண்டறிக்கை
# 2021

**ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

National Transport Commission

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)

**முகவரி**

241, பூங்கா வீதி,

கொழும்பு 05

**இணையத்தளம்**

www.ntc.gov.lk

மின் அஞ்சல்

info@ntc.gov.lk

**துரித அழைப்பு**

1955

# தலைவரின் செய்தி



அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கை ஆவணத்தின் பிரகாரம் இலங்கை மக்களுக்கு வினைத்திறன்மிக்க, உயர் தரமிக்கதாக, சூழல்நேயமிக்க, வசதிமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பல செயற்றிட்டங்களையும் போக்குவரத்திற்கு நவீன பிரவேசமொன்றினை ஏற்படுத்தும் பொருட்டு பல பணிகளையும் ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

அவற்றுள், சிசு செரிய செயற்றிட்டத்தினைத் தொடர்ந்தும் பேணிச் செல்லல் மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மத்தியில் இப்பேருந்துச் சேவையினைப் பிரபல்யப்படுத்துதல், தனியார் மற்றும் இபோச பேருந்துகளுக்கு ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல், புகையிரதச் சேவையுடன் ஒன்றிணைந்த பேருந்துச் சேவைகளை ஆரம்பித்தல், சாரதிகள் பயிற்சி நிகழ்ச்சிகளை புதிய கோணத்தில் செயற்படுத்துதல், பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு முன்செலுதத்தப்பட்ட (பிரீ பெய்ட்) அட்டை முறையொன்றினைச் செயற்படுத்துதல் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. இதற்கு மேலதிகமாக கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு கெமி செரிய, நிசி செரிய செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் பேணிச் செல்லல், பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு சௌகரியமிக்க பயணம் - சூழல்நேயமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு நவீன தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்தில் அறிமுகப்படுத்துவதற்கு செயற்றிட்டங்கள் பலவற்றை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

எனினும் 2021ஆம் ஆண்டில் ஏப்பிரல் மாதம் ஆரம்பித்த கோவிட் 19 தொற்றுப் பரவல் இரண்டாவது அலை காரணமாக ஏற்பட்ட சவால்களினால் திட்டமிடப்பட்ட செயற்றிட்டங்கள் பலவற்றால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கிச் செல்ல முடியவில்லையாயினும் அவற்றுள் சில செயற்றிட்டங்களைக் குறிப்பிடத்தக்களவு மட்டத்திற்கு நிறைவேற்றிக் கொள்ள முடியுமாயிற்று.

அவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவிபுரிந்த கௌரவ போக்குவரத்து அமைச்சருக்கும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கும், போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கும் அதற்கு உதவி புரிந்த போக்குவரத்து அமைச்சின் எல்லா உத்தியோகத்தர்களுக்கும், தேசிய போக்குரவத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு மற்றும் ஒட்டுமொத்த பணிக்குழாத்தினருக்கும் மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைகளின் தலைவர்கள் உட்பட பணிக்குழாத்தினர்களுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் உட்பட உத்ததியோகத்தர் குழாத்தினருக்கும் எல்லா பேருந்துகள் உரிமையாளர்களுக்கும் பல்வேறு விதத்திலும் ஆதரவு நல்கிய அனைத்து தரப்பினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சஷி வெல்கம**
**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

# உள்ளடக்கம்


| | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| **1.** | **தேசிய போக்குவரத்து ஆணைக்குழு** | 07 |
| 1.01 | அறிமுகம் | 07 |
| 1.02 | எமது நோக்கு மற்றும் பணி | 09 |
| 1.03 | ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு | 09 |
| 1.04 | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழு | 10 |
| 1.05 | ஆணைக்குழுவின் கட்டமைப்பு | 11 |
| 1.06 | எமது நோக்கங்கள் | 13 |
| **2.** | **2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை** | 14 |
| 2.01 | சமூக நலனை முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல் | 14 |
| 2.02 | பேருந்துத் தரிப்பிடங்களைப் பராமரித்தல் மற்றும் பேருந்து நிலையங்களை முறைப்படுத்தல் | 20 |
| 2.03 | பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தல் மற்றும் பயிற்சி அளித்தல் | 22 |
| 2.04 | போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வு | 24 |
| 2.05 | தூரப் பயண சேவை நிறுத்துமிட சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துதல் | 26 |
| 2.06 | இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல் | 27 |
| 2.07 | பேருந்துக் கட்டணங்களைத் தயாரித்தல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் | 28 |
| 2.08 | போக்குவரத்து தொடர்புடைய தரப்பினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 30 |
| 2.09 | பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் | 31 |
| 2.10 | பேருந்துகளில் ஜீ.பீ.எஸ். (GPS) பொருத்துதல் | 35 |
| 2.11 | தேசிய புள்ளவிபர அறிக்கையினைத் தயாரித்தல் | 36 |
| 2.12 | Park & Ride முறைமையினைச் செயற்படுத்துவதற்கு திட்டங்களைத் தயாரித்தல் | 37 |
| 2.13 | முன்செலுத்தப்பட்ட அட்டை முறை (Electronic Fare Collection) | 38 |
| 2.14 | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மின்வலு தேவைக்காக சூரிய படல்களைப் பொருத்துதல் | 39 |
| **3.** | **செயற்றிட்டங்களல்லாத பணிகள்** | 40 |
| | வருடாந்தக் கணக்கு | 47 |
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 65 |

# 1.0 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 1.01 அறிமுகம்



பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கான தேசிய கொள்கை குறித்து அரசிற்கு அறிவுரை வழங்குதல் மற்றும் அக்கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது.

அச்சட்டத்தின் 3ஆவது பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களையும் அதாவது, அமைச்சரினால் நியமிக்கப்படும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், கொள்கைத் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, கொள்கைத் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், நிதி விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, நிதி விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், அமைச்சரவையின் அனுமதியின் கீழ் கௌரவ போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்படும் மேலும் உறுப்பனர்கள் ஐவரையும் கொண்ட ஆணைக்குழு அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயரின் மூலம் நிறைவான நிலைப்பாட்டினையும் பொதுவான முத்திரையினையும் கொண்ட ஒரு கூட்டுத்தாபனமாகும்.

மேற்படி சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைச் செயற்படுத்துவதற்காக திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள்

கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்புகள், நிதி மற்றும் கொள்வனவு ஆகிய நான்கு திணைக்களங்கள் மற்றும் நிர்வாகம், உள்ளகக் கணக்காய்வு, சட்டம் ஆகிய 3 பிரிவுகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் செயற்படுவதுடன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயம் 241, பூங்கா வீதி, கொழும்பு 05 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துத் தரிப்பிடம் மற்றும் வவுனியா பிரதான பேருந்துத் தரிப்பிடம் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் கிளை அலுவலகங்களாகச் செயற்படுகின்றன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன், பணிப்பாளர் நாயகம் மற்றும் 04 பிரதான திணைக்களங்களின் கீழ் பணிபுரியும் பணிப்பாளர்கள் நால்வர் ஆகியோர் ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழுவில் அடங்குவர்.

## 1.02 எமது நோக்கு மற்றும் பணி

### எமது நோக்கு …

*நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.*

### எமது பணி …

*பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்.*

## 1.03 ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

**2021 ஜனவரி முதல் 2021 திசெம்பர் வரை**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம<br>தலைவர்<br>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம்<br>நிதி அமைச்சு | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திருமதி. ஏஸ். ஜலதீபன்<br>சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்)<br>நிதி அமைச்சு | - உறுப்பினர் (பதவி வழி) |
| 4. | திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க<br>சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்)<br>போக்குவரத்து அமைச்சு | - உறுப்பினர் (பதவி வழி) |
| 5. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க முதலிகே<br>முகாமைத்துவப் பணிப்பாளர்<br>சந்தமாலி டுவர்ஸ் தனியார் நிறுவனம் | - உறுப்பினர் |
| 6. | திரு. எஸ்.ஆர். கொடமுணே<br>பணிப்பாளர்<br>நிஷானீஸ் தனியார் நிறுவனம் | - உறுப்பினர் |
| 7. | திரு. கே. புத்ததாச<br>முன்னாள் செயற்படு பணிப்பாளர்<br>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - உறுப்பினர் |
| 8. | திரு. பீ.ஏ.டீ.ஏ. சம்பத் ரணசிங்க<br>தலைவர்<br>பொதுஜன தனியார் பேருந்துச் சங்கம் | - உறுப்பினர் |

## 1.04 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | -தலைவர் |
| 2. | கலாநிதி நிலான் மிரெண்டா | -பணிப்பாளர் நாயகம் |
| 3. | திருமதி. கே.ஏ.சீ. கருணாரத்ன | -பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 4. | திரு. பீ.எம். இப்திகார் | -பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு) |
| 5. | திருமதி. ஏஸ்.டீ. அத்துகோரல | -பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்) |
| 6. | திரு. டீ.எம்.கே. திசாநாயக்கா | -பணிப்பாளர் (நிதி மற்றும் பெறுகை) |
| 7. | திரு. பி.ஜீ.சீ. கருணாரத்ன | -உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 8. | திரு. பி.ஆர்.ஏ.ரீ.என். ரணதுங்க | - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 9. | திரு. ஏச்.பீ.சீ. குமார | - உதவிப் பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு) |
| 10. | திரு. ஆர்.ஏ. இந்திக்க லால் | - உதவிப் பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு) |
| 11. | திரு. முதித்த நவரத்ன | - உதவிப் பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்) |
| 12. | திருமதி. ஏல்.எஸ். விஜேந்திர | - உதவிப் பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்) |
| 13. | திருமதி. பி.ஏ.என். பெர்னாண்டோ | - உதவிப் பணிப்பாளர் (பெறுகை) |
| 14. | திருமதி. டீ.என்.வீரதுங்க | - உதவிப் பணிப்பாளர் (நிதி) |
| 15. | திருமதி. ஏ.ஏ.எச்.என். முணசிங்க | - உதவிப் பணிப்பாளர் (சட்ட) |
| 16. | திருமதி. ஏஸ்.என். பெரேரா | - உதவிப் பணிப்பாளர் (போக்குவரத்துப் பொறியியலாளர்) |

## 1.05 ஆணைக்குழுவின் கட்டமைப்பு

2021ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 180 ஆகும்.

2021.12.31 ஆந் திகதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

| தொடரிலக்கம் | பதவிப் பெயர் | **பணியாளர் தொகுதி** | **அங்கீகரிக்கப்பட்ட பணியணி** | **சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர்** |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM 2≈1 | 01 | **01** |
| 02 | பணிப்பாளர் | HM 1≈1 | 04 | **04** |
| 03 | உதவிப் பணிப்பாளர் | MM 1≈1 | 17 | **12** |
| 04 | கனிஷ்ட முகாமையாளர் | JM 1≈1 | 21 | **20** |
| 05 | முகாமைத்துவ உதவியாளர் | MA 4 | 36 | **35** |
| 06 | முகாமைத்துவ உதவியாளர் | MA 2≈1 | 03 | **00** |
| 07 | முகாமைத்துவ உதவியாளர் | MA 1≈1 | 76 | **66** |
| 08 | சாரதி | PL 3 | 13 | **13** |
| 09 | அலுவலக உதவியாளர் | PL 1 | 12 | **10** |
| 10 | நேரக் காப்பாளர் | PL 1 | 33 | **18** |
| 11 | தொழிலாளர் | PL 1 | 03 | **01** |
| | **மொத்தம்** | | **219** | **180** |

மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ

## NTC Organization Structure



## எமது குறிக்கோள்கள்

- *நம்பிக்கைமிகு மற்றும் சினேகபூர்வமான பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை நாட்டினுள் தாபித்தல்.*
- *குறைந்தபட்ச போக்குவரத்து வசதிகள் அல்லது போக்குவரத்து வசதிகள் அற்ற பிரதேசங்களின் மக்களுக்கு பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.*
- *நவீன தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு சிறந்த போக்குவரத்துச் சேவையொன்றினை அறிமுகப்படுத்துதல்.*
- *பயணிகள் போக்குவரத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல்.*
- *விசேட தேவையுடையவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் தாபித்தல்.*
- *நம்பிக்கைமிகு மற்றும் சினேகபூர்வமான பயணிகள் போக்குவரத்துச் சேவை மற்ம் பொருட்கள் போக்குவரத்துச் சேவை வசதிகளையும் பொதுப் பயணிகள் போக்குவரத்து ஊடகத்தின் மூலம் வழங்குதல்.*
- *பயணிகள் போக்குவரத்துச் சேவை தொடர்பிலான மனிதவள அபிவிருத்தி.*
- *எல்லா நபர்களாலும் சுமக்கக்கூடிய கட்டண முறையொன்றினை பொதுப் போக்குவரத்துச் சேவையில் அறிமுகப்படுத்துதல்.*
- *வாகனங்கள் மூலம் ஏற்படக்கூடிய சூழல் மாசடைவினைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.*
- *வீதி விபத்துக்களைக் குறைத்தல்.*
- *சமூக நலனிற்காகத் தேவையான பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.*

# 2. 2021 ஆண்டின் செயலாற்றுகை

பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கான தேசிய கொள்கை குறித்து அரசிற்கு அறிவுரை வழங்குதல் மற்றும் அக்கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது.

1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டமானது முறையே 1996 இல 30 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்திய) சட்டத்தின் மூலமும், 2005 இல 27 கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் மூலமும் 2017 இல 6 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்திய) சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டுள்ளது.

அதன் மூலம் சாட்டப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களின் பிரகாரம், பல்வேறு விடயதானங்கள் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனம் அகியவற்றிற்கு இணங்க இலங்கை மக்களுக்கு வினைத்திறன்மிக்க, உயர் தரங்கொண்ட சூழல் நேயமிக்க, வசதியான போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் போக்குவரத்திற்கு நவீன அணுகுமுறையொன்றினை உருவாக்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு செயற்றிட்டங்கள் பலவற்றை 2021ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

அச்செயற்றிட்டங்களின் 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

## 2.01 சமூக நலனை முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவையினை வழங்கும் செயற்றிட்டம்

### 'சிசு செரிய' பாடசாலைப் பேருந்துச் சேவை





பாடசாலை சிறார்கள் உடல், உளச் சோர்வின்றி நேர காலத்துடன் பாடசாலைக்குச் செல்லவும் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்டு பாதுகாப்பாக வீடு திரும்பவும் சலுகைக் கட்டண முறை அடிப்படையில் நம்பிக்கைமிகுந்த பாதுகாப்புடன் கூடிய, பாடசாலை சிறார்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பாடசாலை பேருந்துச் சேவையொன்றினை வழங்குதல் இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். பாடசாலை சிறார்களை பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளைப் பயன்படுத்த வழிவகுப்பதன் மூலம்

பாடசாலை ஆரம்பிக்கும் வேளையிலும் பாடசாலை முடிவடையும் வேளையிலும் நகரத்தை நோக்கி அண்மிக்கும் ஆசனக் கொள்ளளவு குறைந்த தனியார் வாகன எண்ணிக்கையினைக் குறைத்து நகர நெருக்கடி மற்றும் அதனால் ஏற்படக்கூடிய எரிபொருள் விரயம், சூழல் மாசடைவு ஆகியவற்றைத் தவிர்ப்பதும் தனியார் பாடசாலைப் போக்குவரத்து ஊடகங்களுக்கு (வேன் வண்டி மற்றும் பேருந்து) பெற்றோர் செலுத்தவேண்டிய கூடிய கட்டணத்திற்கு ஓரளவு நிவாரணத்தை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் ஏனைய நோக்கங்களில் முக்கியமான நோக்கங்களாகும்.

இச்செயற்றிட்டத்தின் கீழ் இபோச மற்றும் தனியார் பேருந்துகள் இயங்குவதுடன், இப்பேருந்துகளில் பயணிக்கும் பாடசாலை சிறார்களிடமிருந்து சாதாரண பேருந்துக் கட்டணத்தில் அரைப் பங்கினை மாத்திரம் அறவிடுதல், இபோச பேருந்துகளில் பருவச்சீட்டுளைப் பயன்படுத்தி பயண வசதிகளை ஏற்பாடு செய்ய இயலுமாதல் என்பன தனித்துவமானதாகும். அதன் மூலம் ஓட்டுனருக்கு ஏற்படும் நிதிசார் இழப்பினை மீளளிப்புச் செய்வதற்கு பாடசாலை சிறார்களை ஏற்றிச்செல்லும் 01 கி.மீற்றருக்கு 57.00 ரூபா வீதம் அதிகபட்சம் 110 கி.மீ.க்கு (காலை மாலை இரண்டு பயணமுறைக்கான) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் கொடுப்பனவு வழங்கப்படும்.

**சிசு செரிய செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம்**

2021ஆம் ஆண்டிற்கு 80 புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், 2021ஆம் ஆண்டில் சிசு செரிய சேவைக்கான கேள்வி அதிகமாக ஏற்பட்டதுடன் அதன் பிரகாரம் 2021.12.31ஆந் திகதியாகையில் நாடு முழுவதையும் உள்ளடக்குமாறு 97 புதிய சிசு செரிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி இச்செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 121.25 ஆகியது. அதன் பிரகாரம் கடந்த 05 ஆண்டுகளில் இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | **திசெம்பர் 31ஆந் திகதியில் சிசு செரிய பேருந்துச் சேவை எண்ணிக்கை (மொத்த எண்ணிக்கை)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
| மேல் | 424 | 431 | 422 | 426 | 431 |
| தென் | 272 | 286 | 104 | 107 | 107 |
| வடமேல் | 147 | 155 | 298 | 321 | 351 |
| வடமத்திய | 121 | 118 | 163 | 168 | 187 |
| சப்பிரகமுவா | 126 | 127 | 122 | 122 | 123 |
| ஊவா | 82 | 92 | 100 | 111 | 141 |
| கிழக்கு | 109 | 115 | 117 | 117 | 122 |
| மத்திய | 48 | 51 | 51 | 53 | 55 |
| வடக்கு | 32 | 36 | 36 | 36 | 36 |
| மாகாணங்களுக்கு இடையில் | 09 | 07 | 07 | 07 | 12 |
| மொத்தம் | **1370** | **1418** | **1420** | **1468** | **1565** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ




இதற்கு மேலதிகமாக, கோவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக பிள்ளைகள் சுகாதாரப் பாதுகாப்புடன் பயணிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல், சுகாதாரப் பாதுகாப்புமிக்கதாக பேருந்துகளில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கு பேருந்துகளுக்கு மேலதிக பயணமுறைகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக 2021ஆம் ஆண்டில் மார்ச் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெற்ற காலப்பகுதியில் பிள்ளைகளைத் தொடர்ச்சியாக, சுகாதாரப் பாதுகாப்புமிக்கதாக ஏற்றிச் செல்லலும் இச்செயற்றிட்டத்தின் கீழ் செயற்படும் இபோச மற்றும் தனியார் பேருந்துகளால் மேற்கொள்ளப்பட்டது.

2021 நவம்பர் மாதத்தில் மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டதும் “சிசு செரிய” பாடசாலைப் பேருந்துச் சேவைக்காக பாரிய கேள்வி பெற்றோரிடமிருந்தும் பாடசாலைகளில் இருந்தும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றதுடன் இக்கேள்விக்கான பேருந்துகளை வழங்குதல் தாமதமாவதைத் தவிர்ப்பதற்கு (துரிதப்படுத்துவதற்கு) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ்,

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மாகாணப் பாதைகளுக்காக சிசு செரிய சேவையினை வழங்குவதற்கு சிசு செரிய சேவைக்காக மாத்திரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- மாகாணங்களுக்கு இடையிலான சிசு செரிய சேவைக்காக மாத்திரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
- 15 வருடங்கள் பழைய பேருந்துகளை மோட்டார் வாகன திணைக்களத்தின் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தி தரச் சான்றிதழினைப் பெற்று சிசு செரிய சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதித்தல்.
- எரிபொருள் விலை அதிகரித்தமைக்கு இணைவாக சிசு செரிய சேவையின் கீழ் இயங்கும் பேருந்துகளுக்கு கொடுக்கப்படும் உதவுத்தொகையினை அதிகரிப்பதற்கான அனுமதியினைக் கோரி வரவுசெலவு திட்ட பணிப்பாளர் நாயகத்திடம் முன்மொழிவினை முன்வைத்தல்

என்பன மேற்கொள்ளப்பட்டன.

## ‘கெமி செரிய’ கிராமிய பேருந்துச் சேவை செயற்றிட்டம்

1991இன் இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 8ஆவது பிரிவு (ஒ) உறுப்புரையின் பிரகாரம் பேருந்துச் சேவையினை வழங்குவதற்காக போட்டிமிக்க கேள்விகளைக் கவனத்திற் கொண்டதன் பின்னர் உரிய நபர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலாபமற்ற பாதைகளில் பேருந்துச் சேவைகளை வழங்குவதைப் பொறுப்புக்கூறுவதும் தேவைப்படுமிடத்து அவ்வாறான சேவைகளை வழங்கும் நபர்களுக்கு நிதியுதவி வழங்குவதும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணியாகும். அதன் படி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2005ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



அதன் பிரகாரம், எவ்விதப் பேருந்துச் சேவையும் செயற்படாத, சமூக ரீதியாகப் பேருந்துச் சேவையொன்று அவசியமாயினும் இலாபமற்ற பாதையென்பதால் பயணிகள் போக்குவரத்திற்கு ஓட்டுனர்கள் முன்வராத கிராமப்புற பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு உதவுதொகையின் கீழ் பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையினை ஆரம்பித்தல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

‘கெமி செரிய’ பேருந்துச் சேவைக்கு ஓட்டுனர்களைத் தெரிவுசெய்தல் திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், அதன்போது ஒரு கி.மீற்றருக்கு 38 ரூபா அதிகபட்ச உதவித்தொகையினைச் செலுத்தும் அடிப்படையில் 01 கி.மீற்றருக்கு குறைந்த ஏலத்தினைக் கோரும் ஓட்டுனர் தெரிவுசெய்யப்படுவார். அவ்வாறு தெரிவுசெயயப்பட்ட ஓட்டுனருக்கு உரிய போக்குவரத்து அதிகார சபையினால் கிராமப்புறப் பாதைகளில் பயணிகள் போக்குவரத்திற்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் பரிந்துரை பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் உரிய பேருந்து உரிமையாளர் கெமி செரிய செயற்றிட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உதவித்தொகை அதிகபட்சம் மூன்று வருடங்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செலுத்தப்படும். மூன்று வருடங்களின் பின்னர், அப்பாதை பொருளாதார ரீதியாக இலாபகரமிக்க பாதையாக மாறக்கூடும் என்பதால் உதவித்தொகைக் கொடுப்பனவு நிறுத்தப்படும். அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட கெமி செரிய சேவைகள் பல தற்போது பொருளாதார ரீதியாக இலாபகரமிக்கதாகக் கிரமப்புற மக்களுக்கு சேவையினை வழங்கிச் செயற்படுகின்றன.

### கெமி செரிய செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டில், புதிய 20 சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றும் 'ஊருடன் உரையாடல்' நிகழ்ச்சிகளில் ஊருக்கு பேருந்தொன்று பெற்றுத் தருமாறு கோரப்பட்ட 24 விண்ணப்பங்கள் 2021.12.31ஆந் திகதியாகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றுள் 11இற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 13 பாதைகளுக்கான விலைமனு கோரப்பட்டு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக (பாதைகளின் நிலை, பாதையின் தூரம், தற்போது காணப்படும் போக்குவரத்துச் சேவைகள் போன்ற) உரிய தகவல்களை த் திரட்டுவதற்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளுக்கு 2021.12.31ஆந் திகதியாகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் 2021.12.31ஆந் திகதி வரை உதவித்தொகைப் பெற்றுக்கொண்டு செயற்படுத்தப்பட்ட 'கெமி செரிய' சேவைகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | **கெமி செரிய பேருந்துச் சேவை எண்ணிக்கை (மொத்த எண்ணிக்கை)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
| மேல் | | | | | |
| தென் | | | | | |
| வடமேல் | 02 | 04 | 04 | 04 | 03 |
| வடமத்திய | | | | | |
| சப்பிரகமுவா | | | | | |
| ஊவா | | | | | |
| கிழக்கு | 02 | 02 | 10 | 11 | 10 |
| மத்திய | 02 | 02 | 01 | 01 | |
| வடக்கு | | | | | |
| மாகாணங்களுக்கு இடையில் | | | | | |
| **மொத்தம்** | **06** | **08** | **15** | **16** | **13** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

### "நிசி செரிய" இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2005ஆம் ஆண்டில் இந்த நிசி செரிய இரவுநேரப் பேருந்துச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



இரவு வேளையிலும் அதிகாலையிலும் பொதுப் போக்குவரத்துச் சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இச்செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் இரவு நேரத்தில் மற்றும் அதிகாலையில் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகள் தொடர்ந்தும் செயற்படாமை காரணமாக பொதுமக்கள் முகங் கொடுக்கும் சிரமங்களைக் குறைத்து அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை வழங்குதல், பொது மக்களுக்கு வேறு போக்குவரத்து ஊடகங்களைப் (முச்சக்கர வண்டி, வாடகை வாகனங்கள்) பெற்றுக் கொள்வதற்கு செலவிடப்படும் அதிகக் கிரயத்தினையும் காலத்தினையும் குறைத்தல் என்பன இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

அதன் பிரகாரம், இச்செயற்றிட்டத்தின் கீழ் இரவின் கடைசிப் பயண முறை மற்றும் அதிகாலையின் முதல் பயண முறைக்கு உதவித்தொகையாக 01 கி.மீற்றருக்கு 19.00 ரூபா வீதம் அரசினால் கொடுப்பனவு செய்யப்படுவதுடன், பொதுமக்களிடமிருந்து அறவிடப்படுவது குறிப்பிட்ட பேருந்துக் கட்டணம் மாத்திரமே.

**நிசி செரிய செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்தின் கீழ் இயங்கும் எல்லா பேருந்துகளும் இலங்கைப் போக்குவரத்துச் சபையீன் பேருந்துகளாவதுடன் 2021ஆம் ஆண்டில் 50 புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது. அதன்படி, 2021.12.31ஆந் திகதியாகையில் 33 புதிய சேவைகளுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆதன் பிரகாரம் இச்செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 66 வீதமாகும்.

2017ஆம் ஆண்டு முதல் 2021.12.31ஆந் திகதி வரை செயற்படுத்தப்படும் 'நிசி செரிய' பேருந்துச் சேவைகளின் விபரம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | நிசி செரிய பேருந்துச் சேவை எண்ணிக்கை (மொத்த எண்ணிக்கை) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
| மேல் | 54 | **62** | 62 | 62 | **62** |
| தென் | 16 | **33** | 33 | 33 | **40** |
| வடமேல் | 14 | **05** | 20 | 21 | 21 |
| வடமத்திய | 11 | **11** | 11 | 11 | 11 |
| சப்பிரகமுவா | 03 | **03** | 08 | 08 | 08 |
| ஊவா | 09 | **09** | 09 | 12 | 12 |
| கிழக்கு | **03** | **03** | 03 | 03 | 03 |
| மத்திய | **20** | 27 | **28** | **37** | **63** |
| வடக்கு | **-** | **-** | **05** | **05** | **5** |
| மாகாணங்களுக்கு இடையில் | | | | | |
| **மொத்தம்** | **130** | 173 | **179** | **192** | **225** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ




### "சிசு செரிய", "கெமி செரிய", "நிசி செரிய" செயற்றிட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

2021ஆம் அண்டு ஆரம்பிக்கையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 1,468 சிசு செரிய சேவைகள், 16 கெமி செரிய சேவைகள், 192 நிசி செரிய சேவைகள் என்பனவற்றிற்கு உதவித்தொகை செலுத்துவதற்கு மற்றும் 2021ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த புதிய 80 சிசு செரிய சேவைகள், புதிய 20 கெமி செரிய சேவைகள், புதிய 50 நிசி செரிய சேவைகள் ஆகியவற்றிற்கு உதவித்தொகை செலுத்துவதற்கு 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டங்களுக்காக தேசிய வரவுசெலவு திட்டத்தில் மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 650 மில்லியன் ரூபாவாகும்.

எனினும், கோவிட் -19 தொற்றுப்பரவல் நிலைமை காரணமாக நீண்ட காலமாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகியமை காரணமாக சாதாரணமாகப் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் இப்பேருந்துச் சேவைகள் இலக்கு வைத்தபடி இயங்கவில்லை. அதன் பிரகாரம் இச்செயற்றிட்டத்திற்காக உதவித்தொகையினைச் செலுத்துவதற்கு 271.0 மில்லியன் ரூபா பொதுத் திறைச்சேரியினால் தேசிய போக்குவரத்து அதிகாரசபைக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

### 2.02 பேருந்து நிலையங்களைப் பராமரித்தல் மற்றும் பேருந்து தரிப்பிடங்களைச் செயற்படுத்தல் செயற்றிட்டம்




இச்செயற்றிட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள பணிகள்

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் பெஸ்ரியன் மாவத்தை தனியார் தூரசேவை பேருந்து நிலையம் மற்றும் வவுனியா பேருந்து நிலையம் ஆகியவற்றின் இயக்க நடவடிக்கைகளை முறைப்படுத்தல் மற்றும் அவ்விடங்களைப் பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முகாமை செய்யப்படும் மாகும்புர, கடுவளை, கடவத்தை பேருந்து நிலையங்களில் இருந்து செயற்படும் அதிவேகப் பாதையின் ஊடாக மேற்கொள்ளப்படும் பேருந்து இயக்க நடவடிக்கைகளை முறைப்படுத்துதல்
- பேருந்துகளின் தரப் பரிசோதனைக்கு 15 நடமாடும் திட்டங்களை மேற்கொள்ளுதல்
- பேருந்துகளின் விபரங்கள் குறித்து போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகளுக்கு 03 அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- 2021 சிங்களப் புத்தாண்டு பேருந்துச் சேவைகள், ஏனைய விசேட விழாக்களுக்கு பயணிகளின் தேவைகள் பிரகாரம் பேருந்துச் சேவைகளை முறைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

**பௌதிக முன்னேற்றம்**

அதன் பிரகாரம், 2021ஆம் ஆண்டில் சிங்கள புத்தாண்டு பேருந்துச் சேவை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதுடன், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியினுள் (2021.04.09 – 2021.04.12) தேசிய போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் கீழ் காணப்படும் கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத் தொகுதியில் இருந்து மற்றும் அதிவேகப் பாதை பேருந்துச் சேவைகள் செயற்படும் பேருந்து நிலையங்களில் இருந்து வெளியேறிய பேருந்துகளின் பயணத்தடவை எண்ணிக்கை 4,264 ஆகும்.

| பேருந்துத் தரிப்பிடத் தொகுதி | பேருந்து பயணத்தடவை எண்ணிக்கை |
|---|---|
| பெஸ்ரியன் மாவத்தை | 3,745 |
| மாகும்புர | 242 |
| கடவத்தை | 162 |
| கடுவளை | 115 |
| **மொத்தம்** | **4,264** |

மூலம்- இயக்கத் திணைக்களம், தேபோஅ

பேருந்துகளின் தரத்தினைப் பரிசோதனை செய்யும் நிகழ்ச்சிகள் 03 மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்போது 800 பேருந்துகளின் தரம் குறித்து பரிசோதனை செய்யப்பட்டது. அதில் உரிய நியமத்திற்கு உட்படாத 67 பேருந்துகள் இனங்காணப்பட்டதுடன் அப்பேருந்துகள் உரிய தரத்திற்கு தயார்படுத்தப்பட்டு செயற்பட ஈடுபடுத்தப்பட்டன. அதன்படி 2021.12.31ஆந் திகதி பேருந்துகளின் தரத்தினைப் பரிசோதனை செய்வதற்காக நடாத்தப்பட்ட நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 20 வீதமாவதுடன் பரிசோதனை செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை படி முன்னேற்றம் நூற்றுக்கு 26 வீத அளவாகும்.

கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக இப்பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளை மற்றும் பேருந்துகளைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய

மேற்கொள்ளல் 2021 ஜனவரி முதல் 2021.12.31ஆந் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் இயங்கிய எல்லா தினங்களிலும் தொடர்ச்சியாக நடைபெற்றது.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேபோஆ நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 4.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2.643 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021.12.31ஆந் திகதியில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 59 வீதமாகும்.

## 2.03 பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

தரமிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணிபுரியும் ஊழியர் குழாத்தினருக்கு பல்வேறு கோட்பாட்டு மற்றும் பிரயோகச் செயற்பாடுகளின் கீழ் தொழிற்சார் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம்

- வீதி நெருக்கடி மற்றும் விபத்துகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ள சாரதிகளின் பொறுப்பற்ற வாகன ஓட்டுகைக்குப் பதிலாக ஒழுங்குமுறையுடனான வாகன ஓட்டுகை
- பயணிகளுடனான சினேகபூர்வமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்
- இத்துறையில் பணி புரிபவர்களின் தொழிலிற்கு மதிப்பினைப் பெற்றுக் கொடுத்தல்
- அவர்களது மனப்பாங்கு மற்றும் நடத்தைகளில் மாற்றமொன்றினை ஏற்படுத்துதல் மற்றும் தேவையான அறிவு மற்றும் பயிற்சியினை வழங்குதல்

ஆகியவற்றிற்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் இவ்வாண்டில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன், இப்பயிற்சி செயலமர்வுகள் புதிய அணுகுமுறையுடன் கீழ்வரும் பிரிவுகள் குறித்து கூடுதலான கவனஞ் செலுத்தி செயற்படுத்துவதற்கு 2021ஆம் அண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம், இலங்கை பொலிஸ், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை போன்ற நிறுனங்களின் அனுபவமிக்க விரிவுரையாளர்களின் பங்குபற்றலுடன், கீழ்வரும் தலைப்புக்களில் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வீதிச் சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகள்
- வாடிக்கையாளர் கவனிப்பு சேவை வழங்கல் உத்திகள்
- அபாயகர ஔடதப் பாவனையின் விளைவுகள்
- பேருந்தினுள் பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகளைப் பயிற்றுவித்தல் நிறுவனத்தினுள்ளேயும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சிக் கல்லூரியிலும் மேற்கொள்ளப்பட்டதுடன். அதன்போது அவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியினைப் பெற்றுக்கொடுத்தல் முதலில் மேற்கொள்ளப்படும். அதன் படி கீழ்வரும் குழுக்கள் ரீதியாக இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

- புதிய சாரதிகள் நடத்துனர்களுக்கான பயிற்சி
- ஏற்கனவே பணியில் உள்ள பணிக்குழாத்தினருக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பெற்றுக் கொடுக்கும் பயிற்சி
- ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஈடுபட்ட சாரதிகள் நடத்துனர்களுக்கான பிரத்தியேகமான பயிற்சி





## பௌதிக முன்னேற்றம்

கோவிட் -19 தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் ஒரு பயிற்சி அமர்வில் அதிகபட்சம் 60 பேர் பங்களிப்புடன் அவ்வாறான 14 செயலமர்வுகளை நடாத்தி 700 நபர்களுக்கு பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

எனினும், நபர்களை ஒன்றுகூட்டி பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மேற்கொள்ள முடியாமையால் 2021.12.31ஆந் திகதியாகையில் 07 பயிற்சி நிகழ்ச்சிகள் மாத்திரம் நடாத்தி 292 சாரதிகள் பேருந்து நடத்துனர்களளைப் பயிற்றுவித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டனர். அதன் பிரகாரம், இச்செயற்றிட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்ட சாரதிகள் பேருந்து நடத்துனர்களின் படி பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 42 வீதமாவதுடன் நடாத்தப்பட்ட பயிந்சி செயலமர்வுகளின் எண்ணிக்கைப் படி நூற்றுக்கு 50 வீதமாகும்.

## நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தினால் (மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2021.12.31ஆந் திகதியாகையில் 1.316 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 53 வீதமாகும்.

## 2.04 போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு





பொதுமக்களின் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான பேருநதுச்சேவைகள் உள்ளனவா என்பதை மதிப்பாய்வு செய்தல் மற்றும் அச்சேவைகளைப் பேணவேண்டிய குறைந்தபட்ச மட்டத்தினைத் தீர்மானித்தல் என்பன 1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

அதன்படி பொதுமக்களின் தேவைகளின் பிரகாரம் நம்பிக்கைமிகு, தரமிக்க, வசதிமிக்க பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையொன்றினை, செலுத்த இயலுமான கட்டணத்தில் வழங்குவதற்காகத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு தேவையான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய தரப்பினருக்கு அனுப்புதல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கீழ்வரும் விடயங்களில் கூடிய அவதானத்தைச் செலுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

- பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை இனங்காணுதல் மற்றும் அதன்படி புதிய பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு வீடு வீடாகப் போய் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் (Household Survey)

- தற்போதுள்ள பேருந்துச் சேவைகளின் இயக்க நேர அட்டவணையினைத் தயாரித்தல் மற்றும் திருத்துதல் ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்படும் பயணிகள் கேள்வி ஆய்வுகள் (Passenger Demand Survey)

- தற்போதுள்ள பேருந்துச் சேவைகளின் தரம் தொடர்பில் பொதுமக்களின் திருப்தித்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் அதன் பிரகாரம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் தரமிக்க பேருந்துச் சேவையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் பயணிகளின் கருத்துக் கணிப்பு ஆய்வுகள் (Passenger Interview Survey)

- பேருந்துகளின் இயங்கும் நேரத்தினை நிர்ணயிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பயணநேர கணக்கெடுப்பு (Travel Time Survey)

**பௌதிக முன்னேற்றம்**

2021ஆம் ஆண்டில் 8 ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டமையால், ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் உண்மை நிலை அறிவியல் ரீதியற்றதாகையால் திட்டமிடப்பட்ட ஆய்வுகளில் 04 ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதமாகும்.







தனிமைப்படுத்தல் சட்டம் அமுலாக்கத்தின் போது அரச மற்றும் தனியார் பிரிவுகளின் நிறுவனங்கள் திறக்கப்பட்டதும் நிலவும் தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் பொதுமக்கள் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளைப் பயன்படுத்துகின்றமை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என இனங்காணல் மற்றும் சுகாதாரமிக்கதாக பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்களை முதன்மையாகக் கொண்டு கருத்துத் தெரிவித்தல் ஆய்வொன்று நாடு முழுவதையும் உள்ளடக்குமாறு 2021ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வின் படி கோவிட் -19 பரவலிற்கு முன்னர் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்திய அலுவலரிகளில் 10% அளவினர் கோவிட் -19 பரவலிற்கு பின்னர் தனியார் போகக்குவரத்து ஊடகங்களை நாடியுள்ளனர் என இனங்காணப்பட்டது.

அதன் பிரகாரம், தேசிய போக்குவரத்து அதிகாரசபையினால் நாரஹேன்பிட்டி, பத்தரமுல்லை ேபன்ற அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் பரவலாகக் காணப்படும் பகுதிகளுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அலுவலகப் போக்குவரத்துச் சேவை பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டதுடன், தேசிய போக்குவரத்து அதிகாரசபையினால் நாரஹேன்பிட்டி நகரத்தினை மையமாகக் கொண்டு குருணாகலை, சிலாபம், இரத்தினபுரி போன்ற பகுதிகளுக்கு மாகாணங்களுக்கு இடையிலான அலுவலகப் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின் படி இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பத்தரமுல்லை நகரத்தினை மையமாகக் கொண்டு புதிய பேருச்துச் சேவைகளை ஆரம்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.

## நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து அதிகாரசபை நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.108 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 3.6 வீதமாகும்.

## 2.05 தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள்



மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயணச் சேவை பேருந்துகள் எல்லா பேருந்துத் தரிப்பிடங்களிலும் நிறுத்தி குறுகிய தூரப் பயணிகளையும் ஏற்றிச் செல்வதால் மாகாணத்தினுள் ஓடும் குறுகிய தூரம் ஓடும் பேருந்துச் சேவைகளுடன் ஏற்படுத்திக்கொள்ளும் பாதகமான போட்டியினைத் தடுப்பதற்கு தூரப் பயணச் சேவை பேருந்துகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அறிமுகப்படுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தனியார் பேருந்துச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி பாதைக்குப் பாதை தூரப்பயண சேவை நிறுத்தும் இடங்கள் தீர்மானிக்கப்படுவதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின், கொழும்பு மாநகர சபையின், இலங்கை போலிசின், உரிய மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களைக் கொண்ட கமிட்டி மூலம் அப்பாதைகள் பௌதிக ரீதியாகப் பரிசோதனை செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இட சமிகஞைப் பலகைகள் பொருத்தப்பட வேண்டிய இடங்கள் துல்லியமாக இனங்காணப்படும்.

## பௌதிக முன்னேற்றம்

2021ஆம் அண்டின் திருத்தப்பட்ட செயற்படு திட்டத்தின் பிரகாரம், கொழும்பிற்குள் பிரவேசிக்கும் 05 பிரதான பிரவேசப் பாதைகளை உள்ளடக்குவதாக 500 மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக, அலுவலகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் கொழும்பு – கதிர்காமம், கொழும்பு – எம்பிலிபிட்டிய (கீழ்பாதை Low Level மற்றும் மேல் பாதை High Level உள்ளடங்குமாறு) மற்றும் கொழும்பு – கண்டி வரையிலான மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இட சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்தவேண்டிய இடங்கள் இனங்காணப்பட்டன. அதன் பிரகாரம் 2021.12.31ஆந் திகதியாகையில் 300 மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இட சமிக்ஞைப் பலகைகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்பட்ட நிதியினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனமையால் இச்செயற்றிட்டத்திட்டம் எதிர்வரும் வருடத்திற்குப் பிற்போடப்பட்டது. அதன் படி இச்செயற்றிட்டத்தின் நூற்றுக்கு 50 வீதத்தினை அடைய முடியுமாயிற்று.

### நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து அதிகாரசபை நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 10.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.079 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 0.75 வீதமாகும்.

## 2.06 இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைக்கப்பட்ட நேர அட்டவணைகளைத் தயாரித்தல்

2005 இல 27 கொண்டஇலங்கைப் போக்குவரத்துச் சபை சட்டத்தினால் திருத்தஞ் செய்யப்பட்ட் தேசிய போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் ''அறிவியல் ரீதியாக தீர்மானிக்கப்படும் பொது நேர அட்டவணையொன்றின் கீழ் உண்மையிலேயே பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு அனுபவமிக்க பேருந்துச் சேவையொன்று அல்லது தனியார் பேருந்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளல்'' என்பதை நோக்காகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு பொது நேர அட்டவணை தயார் செய்யப்படும்.

அவ்வாறே, அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமிகு நோக்கு கொள்கை ஆவணத்தின் பிரகாரமும் ''போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகள் ஒன்றிணைந்து போட்டித்தன்மையின்றி நியாயமான முறையில் வருமானத்தினை ஈட்டுவதற்கு இயலுமான வகையில் பொது நேர அட்டவணையொன்றின் கீழ் எல்லா பாதைகளுக்கும் நாளொன்றுக்கு 24 மணித்தியாலங்களும் செயற்படும் போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்பது தொடர்பில் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தினைச் செயற்படுத்துகையில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டது.

பேருந்துகளுக்கு இடையில் காணப்படும் பாதகமான போட்டியினைக் குறைத்து அரச மற்றும் தனியார் பிரிவுகளுக்கும் மற்றும் தனியார் பிரிவில் ஒவ்வொரு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரதாரிகளுக்கும் குறிப்பிட்ட சந்தைப் பங்கினை ஓதுக்கிக் கொடுத்தல் மூலம் சாதகமான போட்டித்தன்மையினை (தரமான போட்டியினை) ஏற்படுத்தி பொதுமக்களுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்பான, வசதிமிக்க பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதே இச்செயற்றிட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

### இச்செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம்

ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தலைத் துரிதப்படுத்துவதற்கு போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் செயலாளர் அவர்களால் இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உட்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் உறுப்பினர்களாகவும் வாகன முறைப்படுத்தல், பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள், இரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வண்டி தொழிற்றுறை இராஜாங்க அமைச்சு செயலாளரின் தலைமையில் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது.

அதன்படி, 2021ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயற்படு திட்டத்தின் பிரகாரம், 100 பாதைகளுக்கான மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் இயங்கும் பாதைகளுக்கு ஒன்றிணைந்த அட்டவணைகளைத் தயாரித்து செயற்படுத்தவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்டது.

எனினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக மாகாணங்களுக்கு இடையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் 2021 மே மாதம் 10ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டமையால் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டன. மீண்டும் நவம்பர் மாதம் 01ஆந் திகதி மாகாணங்களுக்கு இடையில் பேருந்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதும் அந்நாள் முதல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் பதுளை – கொழும்பு (பயணப்பாதை இல 99) ஊடாக இயங்கும் இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

பயணப்பாதை இல 87 ஊடாக கொழும்பில் இருந்து சிலாபம், புத்தளம் ஊடாக அநுராதபுரம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற நகரங்களுக்கு ஓடும் எல்லா பேருந்துச் சேவைகளுக்கும் ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாகத் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கம் மட்டுப்படுத்தப்பட்டதன் விளைவாக இலக்கு வைத்த எல்லா சேவைகளுக்கும் ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த முடியாது போனதுடன், அதிவேகப் பாதைகளில் செயற்படும் எல்லா மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைககளின் ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் பயணிகள் கேள்விகளுக்கு ஏற்பப் பொருந்துமாறு மீண்டும் தயாரித்தல் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இச்செயற்றிட்டத்தினைத் துரிதப்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்ட கமிட்டி ஒன்றின் மூலம் நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சினதும் மற்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சினதும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபையினை அறிவூட்டும் கலந்தரையாடலொன்றும் இவ்வாண்டின் போது நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் பௌதி முன்னேற்றம் நூற்றுக்கு 30 வீதமாகும்.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.054 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 5.4 வீதமாகும்.

## 2.07 பேருந்துக் கட்டணத் திருத்தம் மற்றும் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள பேருந்துக் கட்டணக் கொள்கையின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வருடாந்தம் பேருந்துக் கட்டணங்களை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டணக் கொள்கையின் பிரகாரம், பேருந்துக் கட்டணங்களை நிர்ணயித்தல் ஆகுசெலவு காரணிகளின் பிரகாரம் பேருந்துக் கட்டணங்களைத் திருத்தஞ்செய்ய வேண்டும் எனக் கருதினால், ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01ஆந் திகதியன்று பேருந்துக்

கட்டணத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக எரிபொருள் விலை, மொத்த 01 கி.மீற்றரின் ஆகுசெலவு 4% அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மாகாணத்திற்குள்ளேயான பேருந்துக் கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

இப்பேருந்துக் கட்டண கொள்கையினை இற்றைப்படுத்தி புதிய கட்டணக் கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்கு ஏற்கனவே அமைச்சரவையின் அனுமதியின் கீழ் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### பௌதிக முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் வருடாந்தம் பேருந்துக் கட்டணங்களைத் திருத்தியமைத்தல், பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல், ஏற்கனவே அமுலில் உள்ள பேருந்துக் கட்டண கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தும் விதத்தில் இற்றைப்படுத்துதல் என்பன 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டன. அதன் பிரகாரம், 2021 மே மாதம் 30ஆந் திகதியில் காணப்பட்ட விலையினைக் கவனத்திற் கொண்டு மொத்த 01 கி.மீற்றரின் ஆகுசெலவின் மாற்றம் கணக்கிடப்பட்டது.

எனினும், கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக பேருந்து இயக்கம் முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் கோவிட் தொற்றின் இரண்டாவது அலை காரணமாக சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2020.11.11ஆந் திகதி முதல் 20% விசேட பேருந்துக் கட்டண அதிகரிப்பொன்றை சாதாரண பேருந்துச் சேவைகளுக்கு பெற்றுக் கொடுத்தமையால், 2021 யூலை 01ஆந் திகதி வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும், 2021 ஜூன் மாதம் 11ஆந் திகதி மற்றும் 2021 திசெம்பர் மாதம் 20ஆந் திகதி டீசல் விலை முறையே 7/-இனாலும் மற்றும் 10 ரூபாவினாலும் அதிகரித்தமையால் பேருந்து இயக்குனர்களழனால் பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கும் படி விடுத்த கோரிக்கைப் படி இடைக்கால பேருந்துக் கட்டண திருத்தமொன்று 2021 திசெம்பர் 29ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அதன்போது தற்போதைய பேருந்துக் கட்டணத்தை நூற்றுக்கு 17.44 வீதத்தால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆதன் பிரகாரம் முதல் கட்டணம் 17.00 ரூபாவாகும் விதத்திலும் மற்றும் ஏனைய கட்டணச் சந்தர்ப்பங்களை நூற்றுக்கு 17.44 வீதத்தால் அதிகரித்து புதிய கட்டணத் திருத்தம் 2022 ஜனவரி 05ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது.

ஊவா மாகாணத்தினுள் மற்றும் சப்பிரகமுவா மாகாணத்தினுள் இயங்கும் இபோச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளின் பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குவதற்கு ஊவா மாகாண போக்குவரத்து அதிகார சபை, சப்பிரகமுவா மாகாண போக்குவரத்து அதிகார சபை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஊவா மாகாண போக்குவரத்து அதிகார சபை பல கட்டங்களின் கீழ் பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குவதற்கு அளவிடப்பட்ட தகவல்களைச் சேகரித்தல் மற்றும் வடமத்திய மாகாண பாதைகளில் அளவிடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியினைப் பெறுவதற்காக பணிப்பாளர் சபைக்கு

பத்திரமொன்று 2021ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வளவீட்டு நடவடிக்கைகள் 2022ஆம் அண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமுலில் உள்ள பேருந்துக் கட்டண கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தும் விதத்தில் இற்றைப்படுத்தி புதிய பேருந்துக்கட்டண கொள்கையொன்றினைச் செயற்படுத்துவதற்குரிய ஆய்வினை கோவிட் -19 தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக மேலும் பிற்போடுவதற்கு ஏற்பட்டமையால் போக்குவரத்து அமைச்சின் வழிகாட்டல் பிரகாரம் அவ் ஆய்வின் மூலம் சேகரிப்பதற்குத் தீர்மானித்த தரவுகளைப் பேருந்து உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு தற்போதுள்ள பேருந்துக்கட்டண கொள்கையினை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளை தற்காலிகதாக மேற்கொள்வதற்கு அது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியினால் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, ஆய்வுப் படிவத்தினைத் தயாரித்து இணக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் போக்குவரத்து அமைச்சினால் கமிட்டி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் படி பயணிகளின் போக்குவரத்து இயல்புநிலைக்கு திரும்பிய பின் 100 பாதைகளுக்கான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏற்கனவே அமுலில் உள்ள பேருந்துக் கட்டணக் கொள்கையினை இற்றைப்படுத்தி செயற்படுததுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இச்செயற்றிட்டத்தின் மொத்த பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 40 வீதமாகும்.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.026 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 1.3 வீதமாகும்.

## 2.08 போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

தரமான பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை நிறுவுவதற்கு தேவையான சூழலைத் தயார்படுத்தும் நோக்குடன் கீழ்வரும் 10 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுதும் மாகாணங்களை மையமாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் நடாத்துவதற்கு 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

- வீதிப் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துதல்
- போக்குவரத்துத் திட்டமிடல்
- நேர அட்டவணைகளைத் தயாரித்தல்
- அலுவலக முறைமைகள் குறித்து மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல்
- பேருந்து இயக்கம், பணிக்குழாத்தினர் முகாமை, பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நிபந்தனைகள் தொடர்பில் பேருந்து ஓட்டுனர்களை அறிவுறுத்துதல்
- பயணிகள் உரிமை தொடர்பில் பயணிகளை மற்றும் பேருந்துச் சாரதிகள் நடத்துனர்களை அறிவுறுத்துதல்

### பௌதிக முன்னேற்றம்

நிலவுகின்ற தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு வரையறைகள் ஏற்பட்டதுடன் சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி பிரீபெய்ட் அட்டை தொடர்பில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களை அறிவுறுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2021.12.31ஆந் திகதியாகையில் 08 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஆதன்படி இச்செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 80 வீதமாகும்.

### நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.24 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 16 வீதமாகும்.

## 2.09 பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாக மற்றும் விளைபயன்மிக்கதாக மேற்கொள்வதற்கும் பயணிக்கும் மக்களுக்கு நம்பிக்கைமிகு, தரமிக்க, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதற்கும் நாளுக்கு நாள் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் இருந்து விலகிச் செல்லும் பயணிக்கும் மக்களை மீண்டும் பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையின் பால் ஈர்த்துக் கொள்வதற்கும் அலுவலக நடவடிக்கைகளுக்காக மற்றும் பொதுப் போக்குவரத்து பேருந்துகளுக்காக புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டின் போது விசேட கவனஞ் செலுத்தப்பட்டு செயற்றிட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப அலகினால் நிறுவனத்தின் வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல், நிறுவுதலும் நிறுவனத்தின் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப தலையீட்டினை மேற்கொள்ளுதல் இவ்வலகின் பிரதான பொறுப்பு ஆகும். இத்தகவல் தொழில்நுட்ப அலகின் ஊடாக அமுல்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பல காணப்படுவதுடன், அச்செயற்றிட்டங்களின் 2021ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் கீழ்வருமாறு.

<u>நிறுவனச் செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் செயற்றிட்டம்</u>





அலுவலகச் செயற்பாடுகளைத் தன்னியக்கமயப்படுத்தலை கணினி மென்பொருள் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளுதல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இச்செயற்றிட்டத்தின் போது நிறுவனத்தில் காணப்படும் இயக்கம், திட்டமிடல், தரப் பாதுகாப்பு ஆகிய திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இனங்கண்டு அச்செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் 03 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் பொதுமக்களுக்கு துரித சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிறுவனத்தின் கோப்புக்களை மின்னணு முறைமை ஊடாக மேற்கொள்வதன் மூலம் நம்பிக்கைமிகு பாதுகாப்புமிக்க வினைத்திறன்மிக்க முறைமையொன்றினை நிறுவுவதும் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஒவ்வொரு தொகுதியும் செயற்படும் போது இத்தொகுதிகள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களை இச்செயற்றிட்டத்திற்கு இசைவாக்கஞ் செய்தல் மற்றும் பயனர்களுக்கு வசதிமிக்கதாக (User Friendly) அத்தொகுதிகளைக் கையள்வதற்கு தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2020ஆம் ஆண்டில் இந்த மென்பொருளினை மிகவும் சீராகப் பயன்படுத்தவதற்கு தேவையான அவ்வத் திணைக்களங்களினால் கோரியுள்ள திருத்தங்கள் (Changes) மேற்கொள்வதற்கு கூடிய காலம் எடுத்தது. அவ்வாறே பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக NFC அட்டையொன்றை வெளியிடுவதற்கும் 2020ஆம் ஆண்டில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 மார்ச் மாதம் 05ஆந் திகதி அவ் அட்டை வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டில் இம்மென்பொருளைச் செயற்படுத்தும் போது ஏற்படும் சிக்கல் நிலைமைகளைப் புரிந்து கொண்டு அச்செயற்பாடுகளை மிகவும் சீரானதாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக நிறுவனத்தில் காணப்படும் நிதிசார் நிலையற்றதன்மையால் இச்செயற்றித்திற்குரிய வன்பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாது போயிற்று.

அதன் படி, நிறுவனத்தினைத் தன்னியக்கமயமாக்கல் செயற்பாட்டின் முதல் கட்டம் நிறைவடைந்து உள்ளதுடன், நடைமுறைப்படுத்தும் போது இனங்காணப்பட்ட சிறு மாற்றங்கள் மேலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் இரண்டாவது கட்டத்தினை ஆரம்பித்தல் தொடர்பில் ‘சஹசர’ செயற்றிட்டத்துடன் இணைந்து செயற்படுதல் ஆய்வில் உள்ளது.

- **கூகள் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுப் போக்குவரத்துத் தரவு விபரக்குறிப்பினை அறிமுகப்படுத்துதல் (GTFS)**

கூகள் வரைபடத்தினுள் பொதுப் போக்குவரத்துத் தரவு விபரக்குறிப்பினை உட்படுத்துதல் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், அச்செயற்றிட்டத்தின் இன்னொரு நீட்டிப்பாக எல்லா மாகாணப் போக்குவரத்து அதிகாரச் சபைகளினதும் பேருந்துப் பயணப்பாதைகள் இச்செயற்றிட்டத்தினுள் உட்புகுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாயினும், இந்த கோவிட் 19 தொற்றுப் பரவல் நிலைமையில் 2021ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட இலக்கினை நோக்கிச் செல்லமுடியாது போயினும் தென் மாகாணப் போக்குவரத்து அதிகாரச் சபையின் 71 பாதைகள் கூகள் வரைபடத்தினுள் உட்புகுத்தப்பட்டது.



- **நிகழ்நிலை முறையில் பேருந்துகளில் ஆசனங்களை ஒதுக்கும் செயற்றிட்டம்**

இச்செயற்றிட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் நேரகாலத்துடன் ஆசனங்களை ஒதுக்குதல் நிகழ்நிலை முறையில் மேற்கொள்வதற்கு தேவையான மென்பொருளை அபிவிருத்தி செய்தல் 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கும் பேருந்துகளில் ஆசனங்களை நேரகாலத்துடன் ஒதுக்குதல் நிகழ்நிலையில் மேற்கொள்ளும் வசதி 2021.12.31ஆந் திகதியாகையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. இவ்வசதிகளை எல்லா பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்காக நிகழ்நிலை முறையில் ஆசனங்களை ஒதுக்கும் செயற்றிட்டம் மாகாண அதிகாரசபையுடன இணைந்து செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்செயற்பாடு தொடர்பில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனமொன்றினைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், system IPG provider ஆக HNB வங்கி பெறுகை நடைமுறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.






## Mybussl Application வெளியீடு

எல்லா பயணிகளும் பயன்படுத்தக்கூடிய Mybus App வெளியீட்டினை 2020ஆம் ஆண்டில் மேற்கொண்டமை தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு கிடைத்த மிகச்சிறந்த வெற்றியாகும்.







ஜீபீஎஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக தமக்கு தேவையான பேருந்து உள்ள இடத்தை இனங்காணுதல், பேருந்துகளின் நேர அட்டவணைகள் மற்றும் பேருந்துக் கட்டணங்களை அறிந்துகொள்ள இயலுமாதல், இச்செயலி ஊடாக ஆசனங்களை ஒதுக்கும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி பயணிகளின் முறைபாடுகள், மற்றும் விசாரணைகளையும் இந்த செயலி ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான வசதிகளை அளித்திருத்தல் போன்ற அம்சங்கள் இந்த செயலியினால் செய்ய இயலுமாயுள்ளது. இந்த மென்பொருளிற்காக 2021 ஆம் ஆண்டிற்கான 2021ஆம் ஆண்டில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிறுவனத்தினால் அரசாங்கப் பிரிவிற்கு வழங்கப்படும் தங்க விருது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

## பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 1.291 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 13 வீதமாகும்.

## 2.10 பேருந்துகளில் GPS பொருத்துதல்



2021ஆம் ஆண்டில் 222 GPS சிம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 20 பேருந்துகளில் GPS உபகரணம் பொருத்தப்பட்டுள்ளது. அதன்படி, ஒட்டுமொத்தமாக, 2021.12.31ஆந் திகதியாகையில் GPS அலகின் ஊடாக 1,133 பேருந்துகள் முறைப்படுத்தப்படுவதுடன், மொத்தப் பேருந்துகளில் 37%இற்கு GPS பொருத்தப்பட்டுள்ளது. அதன் படி Mybussl App ஊடாக GPS பொருத்தப்பட்டுள்ள எல்லா பேருந்துகளும் தொடர்பில் நேரடித் தகவல்களைப் பேருந்துப் பயணிகளால் பார்த்துக்கொள்ளும் வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

| சேவை வகை | பேருந்துகளின் எண்ணிக்கை | GPS பொருத்தப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| அதி சொகுசு | 113 | 91 |
| சொகுசு | 589 | 556 |
| அரை சொகுசு | 435 | 333 |
| சாதாரண | 1,915 | 153 |
| **மொத்தம்** | 3,052 | 1,133 |

மூலம்- தரப் பாதுகாப்பு மற்றும் வெளித் தொடர்புகள் திணைக்களம், தேபோஆ

### நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 7.13 மில்லியன் ரூபா 2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 89.1 வீதமாகும்.

## 2.11 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை தயாரித்தல் மற்றும் வெளியிடல்

இலங்கை மத்திய வங்கி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகாரசபை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உட்பட போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனமாகிய CILT நிறுவனம் ஆகிய பல நிறுவனங்களிடம் இருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்றுசேர்த்து அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் ‘தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை’ 2010ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

போக்குவரத்து குறித்து ஆய்வு செய்யும், திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களுக்கும் போக்குவரத்து தொடர்பில் கற்கை நெறிகளை மேற்கொள்வோருக்கும் தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் ஊடகமொன்றாக இவ்வறிக்கையினை உசாவுவதற்கு இயலும்.




போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையின் 2019 அறிக்கையினை வெளியிடுதல் மற்றும் 2020/2021 ஆண்டுகள் இரண்டிற்கும் உரிய அறிக்கையினை எழுதி முடிவித்தல் 2021ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. நிலவும் சூழ்நிலைகளின் பிரகாரம், 2019ஆம் ஆண்டிற்குரிய அறிக்கையினை மென்பிரதியாக வெளியிடுவதற்கு நிறுவனம் தீர்மானித்துள்ளதுடன் அதனால் 2019 அறிக்கை மென் பிரதிஜயாக மாத்திரம் வெளியிடுதல் 2021ஆம் அண்டில் மேற்கொள்ளப்பட்டது. 2020/2021 அறிக்கையின் ஆங்கிலப் பிரதி எழுதி முடிவுறுத்துவதையும் இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டது. ஆதன் படி செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 95 வீதமாகும்.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.084 மில்லியன் ரூபா

2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 2.8 வீதமாகும்.

## 2.12 Park and Ride முறையினைச் செயற்படுத்தவதற்கான திட்டமிடலைத் தயாரிக்கும் செயற்றிட்டம்




அதிமேதகு சனாதிபதி அவர்களின் ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் கொழும்பு நகரில் மற்றும் சனநெருக்கடிமிக்க நகர்களில் பரபரப்புமிகு வேளைகளில் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு தனிப்பக்க வழி மற்றும் சுற்றுவட்ட சொகுசு பேருந்துச் சேவையினை (Radial and Circular) அறிமுகப்படுத்தல் தொடர்பில் கவனஞ் செலுத்தி Park and Ride City Bus சேவையினை மாகும்புர பல்தொகுதி பரிமாற்ற மத்திய நிலையத்தினை மையமாகக் கொண்டு ஆரம்பிப்பதற்கு ஆரம்ப ஆய்வினை மேற்கொண்டு அதன் அறிக்கை போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அவ்வறிக்கையினால் பரிந்துரைக்கப்பட்ட பாதைகளுக்கான (C001, C002) இலங்கை போக்குவரத்துச் சபையினால் பேருந்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கான நேர அட்டவணைகளைத் தயாரித்தல், கட்டணங்களைத் தீர்மானித்தல், நிறுத்தும் இடங்களைக் குறியிடுதல் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன.





கௌரவ போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் பிலியந்தலை – கொழும்பு வரை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள City Bus சேவையின் இயக்க நேர ஆய்வினை மேற்கொள்ளல், அப்பாதைக்கான நேர அட்டவணைகளைத் தயாரித்தல், கட்டணங்களைத் தீர்மானித்தல், மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அடையாளங் காணுதல் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு நகரிற்கு சனநெருக்கடிமிக்க நகர்களில் இருந்து பொழும்பினுள் பிரவேசிக்கும் பிரதான பாதை ஊடாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் எதிர்காலத்தில் ஆரம்பிக்க உள்ள Low Floor சொகுசு City Bus பேருந்துகளுக்கான

பேருந்துக் கட்டணக் குறிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு மக்கள் அச்சம் கொண்டமையால் இவ்வாறான சேவைகள் பால் பொதுமக்கள் ஈடுபாடு கொள்ளாமை காரணத்தல் இச்செயற்றிட்டத்தில் திட்டமிடப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் தற்காலிகமாக இடைநிறுதப்பட்டமையால் 2021.12.31ஆந் திகதியாகையில் இச்செயற்றிட்டத்திற்காக எவ்விதப் பணமும் செலவிடப்படவில்லை.

## 2.13 பிரீபெய்ட் அட்டை முறை (Electronic Fare Collection)



சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்கலாக எந்தவொரு பேருந்திலும் பயன்படுத்த முடியுமான ஈ-ரிக்கெட் முறையொன்றை (e-Ticketing System) 2021ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் போக்குவரத்தின் போது பயன்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இணைய வழி மூலமான பிரீபெய்ட் அட்டையொன்றினைச் செயற்படுத்துவதற்குத் தேவையான Backend மென்பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முறையான பெறுகை நடவடிக்கையொன்றின் கீழ் உரிய மென்பொருளைத் தயாரிப்பதற்காக பொருத்தமான நிறுவனமொன்றினைத் தெரிவுசெய்தல் 2021இல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் செயற்பாடு நடைபெறும் விதம் தொடர்பில் முழு சுழற்சிச் சோதனையொன்று (Full Cycle Test) 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இந்த முன்னோடிச் செயற்றிட்டம் 2021ஆம் ஆண்டில் காலி- மாகும்புர பாதையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக பேருந்து இயக்கம் குறிக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படாமையால் முன்னோடிச் செயற்றிட்டத்தினை அமுல்படுத்துதல் 2022ஆம் ஆண்டிற்கு ஒத்திவைக்க நேரிட்டது.

**நிதிசார் முன்னேற்றம்**

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 8.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.008 மில்லியன் ரூபா

2021.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 0.09 வீதமாகும்.

## 2.14 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மின்சக்தி தேவைக்காக சூரிய பேனல்களைப் பொருத்துதல்

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் எதிரவரும் 05 வருடங்களுள் வீடுகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் கூரைகள் மீது பொருத்தும் சூரிய பேனல்கள் மூலம் மின்வலுவினை உற்பத்தி செய்தல் குறித்து கவனத்தைச் செலுத்தும் கொள்கை தொடர்பில் கவனத்தைச் செலுத்தி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளும் மின்சாரப் பயன்பாட்டிற்கு மாற்று வலுவாக சூரிய மின்சக்தியினை உற்பத்தி செய்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் கூரை மீது சூரிய பேனலைப் பொருத்தும் செயற்றிட்டமொன்றைத் திட்டமிடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### பௌதிக முன்னேற்றம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஆலோசனை நிறுவனங்களில் இருந்து பெறுகைச் செயன்முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட NSolar Consultants (Pvt) நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையின் பிரகாரம் சூரிய பேனல் மூலம் மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான முறை “Net Accounting Scheme” என்பதனால் அம்முறைமையின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழவின் கட்டட இல 01இன் கூரை மீது சூரிய பேனலைப் பொருத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 21.0 மில்லியன் ரூபாவாகுவதுடன், சூரிய பேனலைப் பொருத்தவதற்கு பொருத்தமான விதத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கூரையினைத் தயார் செய்வதற்கு அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டின் படி 14.78 மில்லியன் ரூபாவாகும்.

### நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தினால் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ்) 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், இச்செயற்றிட்டத்தின் திட்டமிடப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால் 2021.12.31ஆந் திகதியாகையில் இச்செயற்றிட்டத்திற்காக எவ்விதப் பணத்தொகையும் செலவிடப்படவில்லை.

## 3. செயற்றிட்டங்கள் அல்லாத பணிகள்

### 3.01 பொதுமக்கள் முறைபாடுகள்

தரமான பயணிகள் போக்குவரத்தொன்றினை பயணிக்கும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பொதுப் போக்குவரத்துச் சேவையின் நடத்தையினை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கக்கூடிய ஊடகம் ஒன்றாக இச்சேவைகளைப் பெறும் பொதுமக்களின் பின்னூட்டம் மிகவும் முக்கியமாகும்.




அதன் படி பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் அவர்கள் பெற்றுக்கொண்ட சேவை தொடர்பில் அப்பேருந்துகளின் ஊழியர் குழுவினரின் நடத்தை குறித்து யாதாயினும் சிக்கல்மிகு நிலை ஏற்படின் அது தொடர்பில் முறைபாடு செய்வதற்கு பிரத்தியேகமான பொதுமக்கள் முறைபாட்டு அலகொன்று நிறுவனத்தினுள் நிறுவப்பட்டுள்ளது. அதில் 07 நாட்களிலும் 24 மணித்தியாலங்களாகச் செயற்படும் விதத்தில் துரித அழைப்பு அலகின் ஊடாக பேருந்துச் சேவைகளுக்கான முறைபாடுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், அம்முறைபாடுகள் அவ்வப்போதே முறைபாட்டு விசாரணை அலகிற்கு அனுப்பிவைக்கப்படும். முறைபாடு தன்னியக்கத் தொகுதியில் சேர்க்கப்பட்டதும் முறைபாட்டாளரின் கைத்தொலைபேசிக்கு குறுந்தகவல் ஊடாக முறைபாட்டிற்குரிய விசாரணை இலக்கம் அனுப்பிவைக்கப்படும்.

இவ்வாறு கிடைக்கப் பெறும் முறைபாடுகளில், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலேயே விசாரணை செய்யப்படுவதுடன், மாகாண அதிகார சபைக்குரிய பேருந்துகளின் முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறே இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளின் முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

துரித தொலைபேசி அழைப்பு அலகின் ஊடாக முறைபாடுகளை முன்வைப்பதற்கு மேலதிகமாக கடிதம் மூலம், பெக்ஸ் ஊடாக, மின்னஞ்சல் ஊடாக, MyBus-SL App ஊடாக மற்றும் WhatsApp ஊடாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில் மற்றும் முகநூலில் பொதுமக்கள் முறைபாடுகளை முன்வைத்தல் மேற்கொள்ளப்படும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் தொடர்பில் அனுப்பப்படும் எல்லா முறைபாடுகளும் நன்கு பரிசீலிக்கப்படுவதுடன், அம்முறைபாட்டின் தன்மையைப் பொறுத்து எச்சரிக்கை செய்தல், ஊழியரகளின் சேவையினை இடைநிறுத்துதல், நிர்வாகக் கட்டண அறவீடு போன்ற நடவடிக்கைகளும் அனுமதிப்பத்திர பயணமுறைகளை இடைநிறுத்துதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பயணிகள் சேவை உரிமத்தினை இரத்துச் செய்தல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**முன்னேற்றம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் துரித தொலைபேசி அழைப்பு கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக அலுவலக நடவடிக்கைகள் நடைபெறாத தினங்களிலும் ஒரு நாளைக்கு 24 மணித்தியாலமும் வீட்டிலிருந்து செயற்படுதல் மேற்கொள்ளப்பட்டது. 2021ஆம் ஆண்டில் கோவிட் 19 நிலை காரணமாக பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உரிய முறையில் செயற்படாமையால் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் முறைபாடுகள் குறைவாகக் கிடைத்துள்ள நிலை காணப்படுகின்றது.

2020ஆம் ஆண்டிற்குரிய முறைபாடுகளின் எண்ணிக்கை ரீதியிலான தகவல்கள் அட்டவணை பின்வருமாறு.

2021ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 01 முதல் 2021 திசெம்பர் 31ஆந் திகதி வரை குற்ற வகைக்கேற்ப கிடைக்கப்பெற்ற முறைபாடுகள்

| தொ. இல. | விபரம் | குறியீட்டு இல. | முறைபாடுகளின் எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|---|---|
| 01 | அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை | SE04 | 361 | 16 |
| 02 | பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் | MN12 | 344 | 16 |
| 03 | அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல் | MJ12 | 137 | 6 |
| 04 | முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை | MJ11 | 314 | 14 |
| 05 | கவனயீனமாக வண்டியை ஓட்டுதல்/அதிக வேகம்/ கைத்தொலைபேசியைப் பயன்படுத்துதல்/போட்டிமிக்க ஓட்டுகை/ சிறு விபத்துக்கள் | MJ17 | 427 | 20 |
| 06 | சாரதி /நடத்துனர் நிபுணத்துவ அட்டை இன்றி பணியில் ஈடுபடுதல் | MJ07 | 20 | 1 |
| 07 | இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் | MN12-01 | 46 | 2 |
| 08 | குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல் | MJ01 | 270 | 12 |
| 09 | குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை | SE03 | 166 | 8 |
| 10 | பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை | MJ03 | 37 | 2 |
| 11 | குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை | MJ02 | 27 | 1 |
| 12 | கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்/ பொருத்தமற்ற வீடியோ காட்சிகள் | MN02 | 40 | 2 |
| | **மொத்தம்** | | **2189** | **100** |

மூலம்- தரப்பாதுகாப்பு மற்றும் வெளித் தொடர்புகள் திணைக்களம், தேபோஆ




அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 வரையில் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பயணிக்கும் மக்கள் முகங்கொடுத்த பல்வேறு பிரச்சினைகளை அடிப்படையாகக்

கொண்டு 1850 முறைபாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் பெரும்பாலான முறைபாடுகள் கவனயீனமான வாகத்தை ஓட்டுதல் தொடர்பிலேயே கிடைக்கப் பெற்றுள்ளன. எண்ணிக்கையில் அது 427 முறைபாடுகளாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த முறைபாடுகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமானத்தினைக் கொண்டிருப்பினும் கோவிட் -19 தொற்றுப்பரவல் காரணமாக பொதுப் போக்குவரத்துப் பேருந்துகள் இயங்காமை காரணமாகவே இப்பெறுமானம் குறைவடைந்துள்ளமை தெளிவாகின்றது.

கிடைக்கப்பெறும் எல்லா முறைபாடுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பேருந்து உரிமையாளர்களுக்கு, பணியாளர் குழாத்தினருக்கு எச்சரிக்கை செய்தல், நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல், பயிற்சிகளுக்கு அனுப்புதல், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் ஏற்படும் அபாயமிகு விபத்துகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடும் நடவடிக்கைகளை எடுக்கும். அபாயமிகு விபத்தொன்று பதிவாகியதும் உடனே பேருந்தின் இயக்கத்தினை இடைநிறுத்தி விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், நீதிமன்ற அறிக்கை மற்றும் பொலிஸ் அறிக்கை பிரகாரம் இவ் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்தல் மற்றும் அபாயமிகு விபத்தினை ஏற்படுத்திய சாரதிகளுக்கு மீண்டும் பொதுப் போக்குவரத்துச் சேவை பேருந்துகளில் பணி புரிவதற்கு இயலாதவாறு சேவைப் பதிவினை இரத்துச் செய்து கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்படும்.

### 3.02 நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிக்கும் பேருந்து தொடர்பில் நிபந்தனைகள் தொடரொறொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிபந்தனைகளின் பிரகாரம் பேருந்துகளைச் செயற்படுத்துதல் குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். அப்பரிசோதனைகளின் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியவாறு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை இயக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட பேருந்து தொடர்பில் விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தரமிக்க சேவையொன்றினைப் பயணிக்கும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்து பொதுப் போக்குவரத்தின் பால் அதிகமான எண்ணிக்கையில் பயணிகளை ஈர்த்துக்கொள்வதே இச்சேவையின் பிரதான நோக்கமாகும்.

#### முன்னேற்றம்

நடமாடும் பரிசோதனைப் பிரிவினால் பயணிக்கும் வழியில் பரிசோதனை செய்யப்படும் பேருந்துகளில் இனங்காணப்படும் நிபந்தனைகளை மீறியமைக்காக நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல், பயிற்சிகளுக்கு அனுப்புதல், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் இவ்வலகின் கீழ் மேற்கொள்ளப்படும். 2021ஆம் ஆண்டில் நிலவிய கோவிட் -19 தொற்றுப் பரவல் நிலைமைக் காரணமாக நடமாடும் பரிசோதனைகளை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிபந்தனைகளை மீறிய எண்ணிக்கை 1220 ஆகும்.

### 3.03 மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

கோவிட் -19 தொற்றுப் பரவல் காரணமாக 2021 ஆம் ஆண்டில் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மேற்கொள்ளவில்லை என்பதுடன், ஏற்கனவே உள்ள அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன.

2021.12.31ஆந் திகதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எணிணக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இல. | சேவை வகை | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சாதாரண | 1,978 |
| 2 | அரை சொகுசு | 433 |
| 3 | சொகுசு | 598 |
| 4 | அதி சொகுசு | 126 |
| **மொத்தம்** | | **3,135** |




மூலம்- இயக்க திணைக்களம்,தோபோஆ

### 3.04 2015ஆம் ஆண்டு முதல் தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் கீழ் தெற்கு அதிவேகப் பாதை ஊடாகப் பேருந்துகளை இயக்கும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

மேற்படி விடயம் தொடர்பில் அமைச்சரவை, சட்டமா அதிபர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபை ஆகியோரால் வழங்கப்பட்ட அனுமதி, அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்படி விடயம் தொடர்பில் பேருந்து உரிமையாளர்களால் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு ஆகியவை பிரகாரம் மேற்படி பேருந்து உரிமையாளர்களுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2021 திசெம்பர் மாதம் 16ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021.12.31ஆந் திகதியாகையில் 15 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திர வழங்கப்பட்டிருந்தது.

### 3.05 மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தின் பேருந்துச் சேவையினை மேம்படுத்துதல்

மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை உச்சளவில் பொதுமக்கள் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தினை வழங்குவதை நோக்காகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் ஏற்கனவே சொகுசு சேவையின் கீழ் வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் கொண்ட மேலதிக பேருந்துகளை தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் கீழ் பாதைகளைத் திருத்தி மாகும்புர முதல் நாட்டின் பிரதான நகரங்கள் வரை இயங்க வைப்பதற்கான திட்டமிடல் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டது.

## 3.06 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வழிமுறையினைத் தயாரித்தல்

2005, 2014, 2016, 2017ஆம் வருடங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் வழங்கப்பட்டிருந்த எல்லா அமைச்சரவை அனுமதிகளையும் இரத்துச் செய்து மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வழிமுறையொன்றினைத் தயாரிக்குமாறு அமைச்சரவையினால் நிபுணர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், அந்நிபுணர் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அந்நிபுணர் குழு அறிக்கையினை கவனத்திற் கொண்டு விசாரணை செய்து அறிக்கை ஒன்று பெற்றுத்தருவதாக அமைச்சரவையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3.07 நீண்ட காலமாக இரத்துச் செய்யப்பட்டிருந்த பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை மீண்டும் செல்லுபடியாக்குமாறு கிடைக்கப் பெறும் மேன்முறையீடு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் யாதாயினும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்று இரத்துச்செய்யப்பட்டு அது குறித்து அனுமதிபத்திரதாரிக்கு அறிவித்ததன் பிறகு அத்தினம் முதல் 14 நாட்களுக்குள் மேன்முறையீடொன்றை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டியதுடன், செயலாளரினால் பெற்றுக் கொடுக்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எனினும், நீண்ட காலமாக இரத்துச் செய்யப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை மீண்டும் செல்லுபடியாக்குமாறு அமைச்சிடம் கோரிக்கை விடப்படும். அதன்படி, 2021.12.31ஆந் திகதியாகையில் அமைச்சின் செயலாளரால் 15 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் செல்லுபடியாக்கும் படி கட்டளை இடப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 05 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை மீண்டும் செல்லுபடியாக்குவதற்கான நடவடிக்கை 2021ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளது.

## 3.08 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்தியமைத்தல்

காலத்தின் தேவையினைக் கருத்திற் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மற்றும் கௌரவ போக்குவரத்து செயலாளரின் அறிவுறுத்தல் படி அமைச்சரவையின் அனுமதியும் பெற்றுக் கொண்டதன் பின்னர் 1991 இலக்கம் 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகளைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2021.12.31ஆந் திகதியாகையில் குறிப்பிட்ட திருத்திய சட்ட வரைவுகள் சட்டவரைஞர் திணைக்கத்தினால் வரைவு செய்யப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1991 இலக்கம் 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தப்படும் பிரதான பிரிவுகள்

1. 28ஆவது பிரிவின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் உரிமையினை முறைப்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள்
2. 31ஆவது பீரிவின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தலுக்கு உரிய ஏற்பாடுகள்
3. 40ஆவது பிரிவின் கீழ் தண்டப்பணத்தை அதிகரிப்பதற்கு உரிய ஏற்பாடுகள்

மேலும், இத்திருத்தத்தின் மூலம் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிக்கான விதிமுறைகளைத் தயாரித்தல், பாடசாலைச் சிறார்களைப் போக்குவரத்துச் செய்யும் பாடசாலை பேருந்துகள் மற்றும் வேன் வண்டிகளுக்கான விதிமுறைகளைத் தயாரித்தல், அலுவலகப் போக்குவரத்துச் சேவையாக பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கான விதிமுறைகளைத் தயாரித்தல், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற புதிய பணிகள் சில உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 3.09 கோவிட் -19 பரவல் காரணமாக பாதிப்புக்குள்ளாகிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு சலுகை வழங்குதல்

கோவிட் -19 மூன்றாவது அலை ஆரம்பமாகியதும் 2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் பின்னர் பயணிகள் போக்குவரத்துத் துறையிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது. கோவிட் -19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினால் அடிக்கடி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் 2021 மே மாதம் 10ஆந் திகதி முதல் 2021 ஒக்டோபர் 30ஆந் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளைத் தொடர்ந்து இயக்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவ்வாறே, பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்தும் பயணிகள் குறைவடைந்ததன் காரணமாக நாளாந்தம் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைவடைந்தது. அவ்வாறே, இயங்கிய பேருந்துகளிலும் பயணிகளின் எண்ணிக்கையில் குறைவு காணப்பட்டது. இதன் காரணமாக, சில பேருந்து உரிமையாளர்களுக்கு தமது நாளாந்த செலவினையேனும் ஈடுகட்ட முடியாதுள்ளதாக பேருந்து உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறே, சில பேருந்துகள் நீண்ட காலமாக இயக்க நடவடிக்கைகளில் இருந்து விலகி இருந்தமையால் அப்பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு ஈடுபடுத்துகையில் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிக தொகையொன்றினைச் செலவிட வேண்டியுள்ளமை பேருந்து உரிமையாளர்கள் செய்த புகார்களில் முக்கியமானதொன்றாகும்.

மேற்படி விடயங்களைக் கவனத்திற் கொண்டு, நிறுவன மட்டத்தில் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படி அமைச்சரவையின் அனுமதி பிரகாரம்,

2021 ஜனவரி முதல் 2021 மார்ச் வரை –

- வருடாந்த விலைமனு கட்டணத்தில் 10%ஐ மாத்திரம் அறவிடுதல்,
- தினசரி குறிப்புப் புத்தகக்/நுழைவுக் கட்டணங்களை அறவிடாமை,
- அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமத்திரக் கட்டணத்தில் 10%ஐ மாத்திரம் அறவிடுதல் போன்ற சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும்

2021 ஏப்பிரல் முதல் 2021 செப்தெம்பர் 30 வரை –

- வருடாந்த விலைமனு கட்டணத்தில் 50%ஐ அறவிடுதல்,
- அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமத்திரக் கட்டணத்தில் 50%ஐ அறவிடுதல்

ஆகியவற்றிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், 2021 ஏப்பிரல் மாதம் இறுதி முதல் ஆரம்பமாகிய கோவிட் மூன்றாவது அலை காரணமாக மேற்படி அமைச்சரவையின் அனுமதி பிரகாரம் கட்டணம் அறவிடாததுடன், மீண்டும் அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் மேற்படி அனுமதிக்கப்பட்ட அறவீடுகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டன.

2021 நவம்பர் 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை –

அமைச்சரவை அனுமதீன் பிரகாரம்

- வருடாந்த விலைமனு கட்டணத்தில் 50%ஐ மாத்திரம் அறவிடுதல்,
- அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமத்திரக் கட்டணத்தில் 50%ஐ மாத்திரம் அறவிடுதல்

ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக

- இலங்கை வங்கியில் இருந்தும் மக்கள் வங்கியிலிருந்தும் சலுகை ரீதியான வட்டி விகிதத்தில் 300,000.00 ரூபா கடன் தொகையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான உத்தரவாதம் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 2021.12.31ஆந் திகதியாகையில் அக்கடன் தொகையினைப் பெற்றுக்கொண்ட பேருந்து உரிமையாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 510 ஆகும்.

- CEAT Kelani International Private Limited, Brown & Company PLC, Lanka Ashok Leyland, Chevron Lubricants Lanka PLC, LAUGFS Lubricants Limited, Diesel and Motor Engineering PLC நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பேருந்துகளின் உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப், மசகெண்ணெய், சில துணைக்கருவிகள் ஆகியவற்றை சலுகை விலையில் பெற்றுக் கொள்வதற்கு அதாவது ரூபா ஓரிலட்சத்திற்கும் இரண்டு இலட்சத்திற்கும் அண்ணளவான கழிவீட்டு வசதியின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு வவுச்சர் பத்திரங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.

  2021.12.31ஆந் திகதியாகையில் மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் மாகாணங்களுக்கு உள்ளேயான ஏறத்தாழ 8000 பேருந்து உரிமையாளர்களுக்கு இந்த வவுச்சர் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### 3.10 2021ஆம் ஆண்டின் சபை கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள்

| | |
|---|---|
| 2021ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட ஆணைக்குழு கூட்டங்களின் எண்ணிக்கை | 12 |
| 2021ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண். | 04 |

# வருடாந்தக் கணக்கு

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள் | 4 | 385,284,936.64 | 404,898,856.29 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள் | | 30,502,154.10 | 30,502,154.10 |
| நூலகப் புத்தகங்கள் | | 1,269,973.81 | 1,269,973.81 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **417,057,064.55** | **436,670,984.20** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம் | 5 | 11,959,500.90 | 7,169,144.60 |
| பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை | 6 | 27,806,515.00 | 25,902,340.00 |
| தவணை வைப்புக்களில் முதலீடுகள் | 7 | 44,842,369.40 | 42,053,092.41 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள் | 8 | 15,645,319.00 | 14,935,680.00 |
| கிடைக்க வேண்டிய வட்டி | | 1,601,883.32 | 2,593,962.78 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 9 | 382,818,404.76 | 517,262,715.21 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **484,673,992.38** | **609,916,935.00** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **901,731,056.93** | **1,046,587,919.20** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| அரசாங்க மானியங்கள் | 10 | 221,338,847.15 | 243,505,851.02 |
| இளைப்பாற்று நலன் கடப்பாடுகள் | 11 | 55,905,538.50 | 53,127,501.50 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **277,244,385.65** | **296,633,352.52** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டியவை | 12 | 1,572,067.70 | 1,870,484.93 |
| மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள் | | 55,608,904.00 | 57,231,404.00 |
| ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள் | 13 | 91,610,135.84 | 108,861,458.62 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **148,791,107.54** | **167,963,347.55** |
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2021 ஆம் வருடத்தில் தற்காலிகப் பேருந்துகளை இயக்குவதற்காக தென்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த 25 அனுமதிப்பத்திரங்கள் கொண்ட 16 புத்தகங்கள் கணக்காய்வுத் திகதி வரையில் பெறப்பட்டிருக்காததுடன் அதற்காகப் பெற வேண்டிய வருமானமும் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஸ் உரிமையாளர் ஒருவருக்கு ரூபா 300,000 வீதம் 510 பஸ் உரிமையாளர்களுக்கு 02 அரச வங்கிகளால் வழங்கப்பட்ட ரூபா 153,000,000 ஆன கடன் தொகைக்காக நிறுவனம் உத்தரவாதம் அளித்தமை காரணமாக இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நிறுவனத்திற்கு அந்த அளவான நிகழத்தக்க பொறுப்பொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் அந்த நிகழத்தக்க பொறுப்பு வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் மீண்டும் செலுத்த வேண்டிய டென்டர் வைப்பு மீதியாக ரூபா 55,608,904 ஆனது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அம் மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான டென்டர் பதிவேடு உட்பட ஏனைய பயன்பாட்டு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 ஆணைக்குழுவின் 2021 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு அனுப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிறுவனத்தின் 2021 இன் வருடாந்த அறிக்கையில்

உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக்கூற்றுக்களுடன் அது சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாகக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அது தொடர்பில் எவ்வித உறுதியான முடிவுகளையும் நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வின் போது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறமுடியுமான போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்தல் எனது பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் 2021 இன் வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறுகள் இருப்பதாக நான் முடிவு செய்தால் அதைத் திருத்துவதற்காக ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களுக்கு அவ்விடயம் வெளிப்படுத்தப்படும். மேலும் திருத்தப்படாத தவறுகள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவக்கத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது

அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவக உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து தோன்றுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கையை நிறுவகம் பேணியுள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுக்கு நேரொத்ததாகும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள ஏனைய சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களின மட்டுப்பாடுகளுக்குள் பின்வரும் வெளிப்படுத்தல்களைச் செய்யும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகியிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் நிருவாக சபையின் நிறுவகத்தின் அங்கத்தவர் எவருக்கும் நிறுவகம் சம்பந்தப்பட்ட ஏதாவது உடன்படிக்கை தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக வழக்கமான வியாபார நிலைமைகளை மீறி தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புபட்ட எழுத்துமூல சட்டங்களுக்கு அல்லது நிறுவகத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளது என.

| சட்டங்கள், விதிகள்/ பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 8.3.9 ஆம் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதியிலிருந்து 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரை போக்குவரத்து அமைச்சின் சேவைக்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்படி காலத்தில் சம்பளமாக ரூபா 584,842 உம், மருத்துவ விடுமுறைகள் மீளளிப்புச் செய்வதற்காக ரூபா 104,480 உம் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 30,000 உம் ஆக மொத்தம் ரூபா 719,322 ஆனது மேற்படி காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சிற்கு விடுவித்தல் மற்றும் நிறுவனத்தின் சம்பளம் உட்பட படிகள் செலுத்துவது தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரக் கடிதம் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டிருந்தது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் காலப்பகுதிக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என.

Global Position System (GPS) அமைப்பின் பராமரிப்பிற்காக 2021 ஆம் வருடத்தில் பஸ் உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகையை விட ரூபா 3,530,745 ஆன மேலகதிக செலவொன்று செய்யப்பட்டிருந்தது

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் , அதற்கு முரணாக 2015 ஆம் ஆண்டிலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இயங்கும் பேருந்துகளுக்கு வழக்கமான பயணிகள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் வருடத்திற்குள் அந்த அதிவேக நெடுஞ்சாலைக்காக ரூபா 5,178,909 பெறுமதியான தற்காலிக அனுமதிப்பத்திரய்கள் 193 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் பொதுவான பொருட் களஞ்சியமொன்று பேணிச் செல்லயப்படாததுடன், பொருட்கள் பெறப்பட்டதன் பின்னர் பொருட்கள் பெறுவனவு பத்திரத்தில் (GRN) குறிப்பு வைக்கப்படாததுடன், பொருட்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் தினசரி

சமப்படுத்தப்பட்டு பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பஸ்டியன் மாவத்த பொதுக் கழிவறை அமைப்பிற்கான வாடகையாக ரூபா 7,609,660 ஆன தொகையொன்று ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட வேண்டியிருந்தது.

(ஈ) முறையே கிரயம் ரூபா 2,952,000 ரூபா 1,730,900 மற்றும் ரூபா 1,000,000 பெறுமதியான 03 வாகனங்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வளாகத்தில் காணப்பட்டதுடன், அவற்றை நீக்கப்படுவதற்கோ அல்லது திருத்தப்படுவதற்கோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 219 ஆக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை உள்ளபடியான பதவியணி 178 ஆகும். அதில் 170 நிரந்தர அடிப்படையிலும் 07 ஒப்பந்த அடிப்படையிலும் சேவையாற்றுவதுடன், 34 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2018 ஆம் வருடத்திலிருந்து 04 வருடகாலப்பகுதியில் 07 அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(எ) நிறுவனத்தின் பாதீட்டு வருமானம் உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்யப்பட்ட போது நூற்றுக்கு 16 வீதத்திலிருந்து நூற்றுக்கு 73 வீதம் வரையான வீச்சில் மற்றும் பாதீட்டுச் செலவுகள் உள்ளபடியான செலவுகளுடன் ஒப்பிடப்பட்ட போது நூற்றுக்கு 30 வீதத்திலிருந்து நூற்றுக்கு 71 வீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) ஆணைக்குழுவின் 2021 ஆம் வருடத்திற்கான 17 செயற்திட்டங்களுக்கான ஒதுக்கங்கள் மற்றும் உள்ளபடியான செலவுகள் பரிசோதனை செய்யப்பட்ட போது ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் நூற்றுக்கு 100 இலிருந்து நூற்றுக்கு 17 வீதம் வரையில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தனது.

(ஐ) ஆணைக்குழுவினால் இலத்திரனியல் முற்கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்தவதற்காக ரூபா 8.6 மில்லியனும், ஆணைக்குழுவின் அலுவலக வளாகத்தில் மின்சார தேவைக்காக சூரிய மின் கலங்களைப் பொருத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்காக ரூபா 15 மில்லியனும், மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பாக 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் பின்வருமாறு.</u>**

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 2021ஆம் ஆண்டில் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குப் பெற்றுக் கொடுத்த தற்காலிக அனுமதிப்பத்திரப் புத்தகங்களுள் மேலும் 01 புத்தகம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டி உள்ளதுடன் அதனைத் துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள தற்காலிக அனுமதிப்பத்திர புத்தகங்களுக்குரிய வருவாய் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்பாராத கடன் வெளிப்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட நிதிக்கூற்று 2022.06.20ஆந் திகதி அரச கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

(இ) கணினிமயப்படுத்தப்பட்ட விலைமனு வைப்புக்கள் பேரேடொன்று உள்ளதுடன் அதற்கு மேலதிகமாக விலைமனு இலக்கத்தின் படி விலைமனு கோரியவர்களின் பெயர்கள் மற்ம் பற்றுச்சீட்டு இலக்கங்களுடன் விபரமான பதிவுகள் கணக்குப் பிரிவில் பேணப்படுகின்றன.

**2. வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.2.2 போக்குவரத்து அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்ற MT/01/05/05/01 இலக்கம் கொண்ட மற்றும் 2020.09.07 மற்றும் 2020.09.28ஆந் திகதிய கடிதங்களின் பிரகாரம், திருமதி கே.எல். இந்திகா லக்மாலி போக்குவரத்து அமைச்சரின் உதவி பணிக்குழுவிற்கு விடுவிக்கப்பட்ட நாள் முதல் மீண்டும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்பட்ட நாள் வரை (2020.10.13ஆந் திகதி முதல் 2021.08.17ஆந் திகதி வரை) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை மீளளிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல சந்தர்ப்பங்களிலும் போக்குவரத்து அமைச்சிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2.2.3 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24ஆவது பிரிவின் பிரகாரம் மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளுக்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ளது. இப்பிரிவின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப் பெறின், விண்ணப்பப்பத்திரத்தில் கோரப்பட்டள்ள பாதையில் அல்லது பாதைகளில் பேருந்துச் சேவைக்கான மக்களின் கேள்வியினைக் கருத்திற்கொண்டு ஆணைக்குழவினால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் அல்லது

தேவைக்கும் அதிகமான பேருந்துகள் அப்பாதையில் செயற்படுத்தப்படுவதானால் நிராகரிக்கலாம்.

அதன் பிரகாரம், இப்பிரிவின் பிரகாரம் பெற்றுள்ள அதிகாரத்தின் படி புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வெளிப்படைத்தன்மையுடன் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 2005ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதி பெற்ற முறைமையொன்றின் பிரகாரம் 2008ஆம் ஆண்டு முதல் சாதாரண பாதைகளில் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதிவேகப் பாதையில் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2017ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

அமைச்சரவையின் தீர்மானத்தின் கீழ் விலைமனு முறை மூலம் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அம்முறைமையில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக புதிய முறைமையொன்றினைத் தயாரிப்பதற்கு அநி 17/123/0409/19/கொண்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்கமிட்டி மூலம் முறைமையொன்று வரைவு செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் போக்குவரத்து அமைச்சரினால் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் சம்பந்தமாக அமைச்சரவைக்கு இல அநி 010/312/0351/21/கொண்ட நிருபம் அனுப்பி வைக்கப்பட்டு மூன்று பேர் கொண்ட கமிட்டி ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்ன் படி புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. எனினும், அதற்காக அமைச்சரவையினால் நிதி அமைச்சு மூலம் பெற்றுக் கொடுத்த அவதானிப்புகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது நிதி அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அவதானிப்புக்களின் மூலம் முன்னைய கமிட்டி மூலம் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் விடயங்களையும் கருத்திற் கொண்டு அவற்றில் சிக்கலான விடயங்கள் இருப்பின் அவற்றிற்கான எளிய முறைமையொன்றினைத் தயாரித்து அறிக்கையொன்றினை அமைச்சரவைக்கு மீண்டும் அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டள்ளது.

அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவ்வரைவு செய்யப்பட்ட திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2.2.4 ஜீ.பீ.எஸ். தொகுதியினைப் பராமரிக்கையில் ஜீ.பீ.எஸ். ஊபகரணங்களின் ஊடாக தரவுகளைப் பரிமாற்றஞ் செய்தலுக்கு மாத்திரம் உரிய அனுமதிப்பத்திரதாரிகளிடமிருந்து வருடாந்தம் 1,500 ரூபா தொகையொன்று அறவிடப்படும். ஆதனால், தொகுதியினுள் செயற்படும் கட்டுப்பாட்டுக் கூடத்தினைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், சர்வர் கணினிகள் மற்றும் ஏனைய தொழில்நுட்பச் சாதனங்களைப் பராமரித்தல், இணைய இணைப்புக்களைப் பராமரித்தல் போன்ற சேவைகளை வழங்குவதற்கு செலவுகள் மேற்கொள்ள நேரிடுகின்றது. எவ்வாறெனினும் இச்செயற்றிட்டத்தின் நோக்கம் வருமானம்

ஈட்டுவதல்ல என்பதுடன் பொதுப் போக்குவரத்துத் துறையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பான மற்றும் விளைபயன்மிக்க போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதாகும்.

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) 2014ஆம் ஆண்டில் வீதித் திருத்தங்கள் மூலம் அதிவேகப் பாதைக்கு வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் 2015ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டு அச்செயற்பாட்டாளர்களைப் பழைய பாதைக்கு இணைக்கப்பட்டிருந்தமையால் அப்பேருந்துகள் அதிவேகப் பாதையில் செயற்பட்ட காலத்தில் பயணிகள் அச்சேவைக்குப் பழக்கப்பட்டவர்களாக இருந்தமையால் பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கும் தொடர்ந்தும் அச்சேவையினைப் பேணிச் செல்வதற்கும் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் பாதைகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 04 சந்தர்ப்பங்களில் பொது அறிவித்தல்கள் மூலம் விலைமனு கோருவதற்கு நடவடிக்கை எடுத்த போதும் அதற்கு எதிராக பேருந்துச் செயற்பாட்டாளர்களால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, அவ்வாறு தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் அனுமதிப்பத்திரதாரிகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வீதிகள் மற்றும் சேவைகள் திருத்தங்களின் கீழ் வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதிவேகப் பாதையில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் சம்பந்தமாகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. (அமைச்சரவை நிருப இல–அறி 014/312/0428/21/

அதன் பிரகாரம் மேற்படி அமைச்சரவை அனுமதியின் படி நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட 67 உரிமங்களில் 02 உரிமங்களைத் தவிர எஞ்சிய 65 உரிமங்களுக்கும் அதிவேகப் பாதை நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூல ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு சிறியதொரு களஞ்சியசாலை பேணப்படும். இக்களஞ்சியசாலையில் கொள்வனவு செய்யப்படும் வருடாந்த காகிதாதிகள் (A4 தாள்கள், புத்தகங்கள், பேனைகள், காட்ரிஜ், ரோனர் போன்றவை), அச்சிடப்பட்ட ஆவணங்கள், அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஆகியவை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்படும். இவை மொத்தமாகப் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் இடைக்கிடையே விடுக்கப்படும் கோரல்களின் பிரகாரம் திணைக்களப் பிரிவுகளுக்கு அக்காகிதாதிகள் விநியோகிக்கப்படும். அத்திணைக்களங்களுக்குத் தேவையான காகிதாதிகளை விநியோகிக்கும் போது ஏடுகளில் முறையாகப் பதிவு செய்யப்படும். அப்பதிவுகள் நாளாந்தம் சமநிலைப்படுத்தப்படும்.

திணைக்களங்களால் அல்லது பிரிவுகளால் கட்டளை செய்யப்படும் பொருட்களைப் பெறுகைப் பிரிவினால் பெறுகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அல்லது சொத்துக்கள்

இருப்புப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் உரிய கோரிக்கை விடுத்த திணைக்களத்திற்கு அல்லது பிரிவிற்கு வழங்கப்படும். அத்திணைக்களத்தினால் அல்லது பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் அவ்வத்திணைக்களத்தினால்/பிரிவினால் பேணப்படுகின்ற பதிவேட்டில் அப்பொருட்கள் கிடைத்தமை பதிவுசெய்யப்படும்.

எனினும், எதிர்காலத்தில், முறையான களஞ்சியசாலையொன்றினைப் பேணும் நோக்குடன் களஞ்சியசாலை பொறுப்பாளர் (Store keeper) என்ற பெயரில் புதிய பதவியொன்றினை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதும், முறையான படிமுறையின் கீழ் நன்கு இடவசதி கொண்ட ஓரிடத்தில் களஞ்சியசாலையொன்றினை நிறுவி வெளிப்படைத்தன்மை கொண்டதாகப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்படும்.

(இ) பெஸ்ரியன் மாவத்தை பொது மலசலகூடத் தொகுதிக்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31ஆந் திகதியில் உரிய வாடகை நிலுவையான 7,609,660.00 ரூபா தொகை ஒப்பந்தம் செய்த நிறுவனத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இயங்குவதற்கு பொருத்தமற்று நிலையில் காணப்பட்ட KB -3305 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வண்டி மற்றும் PB-5676 இலக்கத்தைக் கொண்ட வேன் வண்டி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் KB -3305 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வண்டி 2,683,000.00 ரூபாவிற்கும், PB-5676 இலக்கத்தைக் கொண்ட வேன் வண்டி 2,002,002.00 ரூபாவிற்கும் பெறுகை முறைமையின் கீழ் அதிகபட்ச விலையினை முன்வைத்த ஏலதாரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

அரசாங்கத்தினால் வாகனங்களை இறக்குமதி செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளமையால், 4195-57 இலக்கத்தைக் கொண்ட வேன் வண்டியைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆகும். 2021.12.31ஆந் திகதியில் நிரந்தர ஊழியர்களின் ண்ணிக்கை 178 ஆகும். ஒப்பந்த அடிப்படையில் 07 ஊழியர்களும் நாளாந்த அடிப்படயில் 01 ஊழியரும் பணி புரிவதுடன், வெற்றிடம் காணப்படும் பதவிகளை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் எல்லா ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது.

(ஊ) 2018 ஜனவரி முதல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 07 ஊழியர்கள் ஜீ.பீ.எஸ. கட்டுப்பாட்டுக் கூடத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ் ஊழியர்களின் சேவை அவசியம் குறித்து தேசிய பொக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபைக்கு அறிவித்தததன் பின்னர் பணிப்பாளர் சபையின் பரிந்துரையின் கீழ் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமைத்தவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக தொடர்ந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ் ஊழியர்களின் சேவைக்காலத்தை நீடிப்பதற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டது. 2022.12.31ஆந் திகதி வரை சேவைக் காலம் நீடிக்கப்பட்டுள்ள இவ் ஊழியர்களை ˙நிரந்தரமாக்குவதற்கோ அல்லது ஒரு வருடத்திற்கு

சேவைக்காலத்தை நீடிப்பதற்கோ போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் முகாமைத்தவச் சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ) நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக குறிக்கப்பட்ட இலக்கின் பிரகாரம் செயற்பட முடியாமை விளைவாக இம்மாற்றங்கள் ஏற்பட்டதுடன் எதிர்வரும் ஆண்டில் இம்மாற்றங்களைக் குறைத்தல் குறித்து கவனத்தைச் செலுத்துவற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

(ஏ)

❖ 2021ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட (மதிப்பிடப்பட்ட) வருமானம் கிடைக்காமையால் நிறுவனத்தை நடாத்திச் செல்லும் செலவினங்களை மேற்கொண்டு செயற்றிட்டங்களுக்காகப் பயன்படுத்த நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. அதன் பிரகாரம் கீழ்வரும் செயற்றிட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படினும் அச்செயற்றிட்டங்களின் இலக்கு வைக்கப்பட்ட எல்லா பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அவ் ஒதுக்கப்பட்ட பணம் கிடைக்காமை காரணத்தால் அச்செயற்றிட்டங்களில் பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

- பேருந்துத் தரிப்பிடத்தொகுதிகளைச் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்
- பேருந்துகளில் ஊழியர் குழுக்களின் பயிற்சி மற்றும் பொதுப் போக்குவரத்து (PT) பயிற்சி நிகழ்ச்சிகள்
- உள்ளகத் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பத் தொகுதிகள்
- GPS உபகரணங்கள் மற்றும் கட்டுப்பாட்டுக் கூட பராமரிப்பு
- போக்குவரத்து தொடர்பிலான தரப்பினரை அறிவூட்டும் நிகழ்ச்சிகள்

❖ அப்போதிருந்த நிதி அமைச்சரினால் ''அரச செலவின மீளாய்வு'' என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்ட 2021.08.28ஆந் திகதியிட்ட மற்றும் இல 134/304/1596/21கொண்ட அமைச்சரவை நிருபத்திற்கு பெறப்பட்ட அனுமதியின் பிரகாரம் ''குறிப்பிட்ட அனுமதிகளின் கீழ் மானியங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்படாத றிகழ்ச்சிகள், கொள்வனவுகள், கட்டுமானங்கள், கட்டடங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றைத் தற்காலிகாலிகமாக இடைநிறுத்துதல்'' பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2021ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதாயினும் அப்போது ஆரம்பிக்கப்படாத கீழ்வரும் செயற்றிட்டங்களை ஆரம்பிக்காதிருத்தல்.

- **தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கட்டடங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளைப் பராமரித்தல்**
- **<u>மின்வலுப் பயன்பாட்டினைக் குறைப்பதற்கு மாற்று வழிகளை அறிமுகப்படுத்துதல்</u>**

N Solar Consultants (Pvt) Ltd மூலம் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையினைத் தயாரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அனுமதியினைப் பெறல் மற்றும் சூரிய படல்களைப் பொருத்துவதற்கு கூரையைத்

தயார் செய்வதற்குரிய மதிப்பீட்டினை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபத்தினால் தயார் செய்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு அனுமதி மாத்தரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

- நகரப் போக்குவரத்து நிகழ்ச்சிகள்
- பெஸ்ரியன் மாவத்தை மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத் தொகுதியை நவீனமயப்படுத்துதல்
- கிளிநொச்சி பேருந்து நிலையம் - வட மாகாண சபையின் கோரிக்கை பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை அனுமதியைப் பெற்றுக்கொண்டு எஞ்சிய கட்டுமான பணிகளை வட மாகாண சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிப் பற்றாகுறை காரணமாக மாற்று வழிகளைப் பின்பற்றி கீழ்வரும் செயற்றிட்டங்களுக்கு செலவாகும் பணத்தினை மட்டுப்படுத்துதல் மற்றும் பணம் செலவாகாத பணிகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- **வருடாந்த தேசிய போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கையினைத் தயாரித்தல் -**

  தேசிய போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கை 2021ஆம் ஆண்டிற்கு முன் வருடங்களில் அச்சிடப்பட்ட பிரதிகளாகத் (புத்தகங்களாகத்) தயார் செய்து வருடாந்தம் வெளியிடப்பட்டது. எனினும் 2021ஆம் ஆண்டில் நிதிப் பற்றாகுறை நிலவியமையால் அவ்வறிக்கையினை தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்று மென்பிரதியாக மாத்திரம் தயார் செய்து வெளியிடுவதன் மூலம் தேசிய போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுவதற்கு செலவாகும் தொகையினைக் குறைத்துக் கொள்ளுதல்.

- **பேருந்துக் கட்டணங்களைத் தயாரிக்கும் செயற்றிட்டம் -**

  தேசிய பேருந்துக் கட்டணக் கொள்கை பிரகாரம் பேருந்துக் கட்டணத் திருத்தம் மூன்று பிரதான பத்திரிகைகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அதன் படி தினமிண, தினகரன், டேய்லி நிவுஸ் ஆகிய பத்திரிகைகளில் இரண்டு பக்கங்களை உள்ளடக்குமாறு அறிவித்தல் பிரசுரிக்கப்படும். இதற்கு ஒரு வருடத்திற்கு ஒரு மில்லியன் ரூபா அளவில் செலவிடப்படும். எனினும் இம்முறை பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் தகவல் இலத்திரனியல் முறைகளைப் பயன்படுத்தி (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத்தளம், முகநூல், போக்குவரத்து அமைச்சின் இணையத்தளம்) தேசிய போக்குவரத்து ஆணைக்குழவின் கீழ் செயற்படும் பேருந்துத் தரிப்பிடங்களில், மாகும்புர பல்தொகுதி பரிமாற்ற மத்திய நிலையத்தின் டிஜிட்டல் பலகைகளில், வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு எழுத்து மூலம் அனுப்பி அவ்விடங்களில் அத்தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதைப் பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு மாத்திரம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய

மொழிகளில் சிறிய அறிவித்தலொன்று மேற்குறிப்பிட்ட பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. அதன் மூலம் இச்செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ள நேரிடும் செலவினைக் குறைத்தல்.

- **வீதி நெரிசலைத் தவிர்த்தல் மற்றும் உயர் சேவையொன்றினை வழங்கும் ஆய்வு** – கோவிட்-19 வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமை பரவியதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தமையால் பயணிகளின் போக்குவரத்து நடவடிக்கைகளில் பாரிய அளவில் மாற்றமேற்பட்டது. அதனால், இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து உண்மையான நிலைமை அறிவியல் ரீதியற்றதாயின் 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், கோவிட் -19 வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக வீட்டில் இருந்து கடமைகளை மேற்கொள்ளல், நிகழ்நிலை முறைமையில் அலுவலக மற்றும் கல்வி நடவடிக்கைகளை மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நிலைமைகள் பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகளில் ஏற்படுத்திய தாக்கங்களைக் கண்டறிவதற்கு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அவ்வாய்வின் தகவல்கள் சேகரிப்பினை வீட்டில் இருந்து கடமைகளை மேற்கொள்ளும் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பணியில் இருக்கும் தூரத்தில் உள்ள) அலுவலர்களால் அவர்கள் வதியும் மாவட்டத்தை உள்ளடக்குமாறு மற்றும் அவ்வாறு அவ்வலுவலர்கள் வதியாத மாவட்டங்களில் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபை அலுவலர்களால் மேற்கொள்ளுதல் மற்றும் கூகள் படிவமொன்றின் ஊடாகத் தரவுகளைச் சேகரித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் ஆய்விற்குச் செலவாகும் தொகையினைக் குறைத்துக் கொள்ளல்.

- **தூரத்தைக் காட்டும் பெயர்ப்பலகைகளைப் பொருத்துதல்**-
தூரப்பயணச் சேவைப் பேருந்துத் தரிப்பிட சமிக்ஞைப் பலகைகள் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு முதல் பெந்தரை பாலம் வரை (மேல் மாகாண எல்லையினுள்) 42 சமிக்ஞைப் பலகைகளைக் கொள்வனவு செய்வதற்கு மேல் மகாகணப் போக்குவரத்து அதிகாரசபை விருப்பத்தைத் தெரிவித்துள்ளமையால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட விபரக்குறிப்புக்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் அச்சமிக்ஞைப் பலகைகளைத் தயாரிப்பதற்காக மேல் மாகாண போக்குவரத்து அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள் செயற்றிட்டத்திற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டிய செலவினைக் குறைத்துக் கொள்ளல்.

- **ஒன்றிணைந்த நேர அட்டவணைகள்**-
தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களை உள்ளடக்கி பணிப்பாளர் சபை பத்திரம் 2020.11.20ஆந் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கு 2020.12.22ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டு அரசியலமைப்பு வரைவு மேற்கொள்வதற்கு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டள்ளது. தற்போதும் இத்திருத்தப்பட்ட சட்டம் சட்ட வரைஞர் திணைக்களத்தில் காணப்படுவதுடன், சட்டத் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டதன்

பின்னரே இதன் இறுதி நிபந்தனைகளைத் தயாரிக்க முடியுமாகையால் 2021ஆம் அண்டில் அதற்கான செலவு மேற்கொள்ளப்படாதிருத்தல்.

- **பிரீபெய்ட் அட்டை முறை –**

  பிரீபெய்ட் அட்டை செயற்றிட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சு, இலங்கைப் போக்குவரத்துச் சபை, மக்கள் வங்கி, மத்திய வங்கியின் பிரதிநிதித்துவ நிறுவனமாக லங்கா கிலியர் நிறுவனம் மற்றும் அனைத்து நிறுவனங்களும் உட்பட செயற்படுத்தப்படும் செயற்றிட்டமாகும்.

  அவ்வெல்லா நிறுவனங்களும் இச்செயற்றிட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பின் படி இச்செயற்றிட்டம் முன்னொக்கிச் செல்வது தீர்மானிக்கப்படும். ஏவ்வாறெனினும் இச்செயற்றிட்டம் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியைப் பெறுதல், ஒப்பந்தங்களை கைச்சாத்திடல் போன்று செலவுகளல்லாத பணிகள் 2021ஆம் அண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் இச்செயற்றிட்டத்திற்கு செலவாகிய தொகை குறைவடைதல்.

அதன் பிரகாரம், 2021ஆம் ஆண்டில் நிலவிய தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் குறைதல், மாகாண ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால், மாகாணங்களுக்கிடையிலான பேருந்துச் சேவை மாதக் கணக்காக செற்படாமை, ஊழியர்கள் தொடர்ந்து பணிக்கு வருகை தர இயலாதிருந்தமை போன்ற நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட மேற்குறிப்பிட்ட பல்வேறு உபாய வழிமுறைகள் மூலம் பௌதிக முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படி நிதிப் பயன்பாடு குறைவடைந்ததால் அல்ல எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்காமை காரணமாக அவ்வச்செயற்றிட்டத்திற்கு செலவிட நிதி இல்லாமையால் உரிய செயற்றிட்டங்களில் பணம் செலவிடப்படாத பௌதிகப் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் பணம் குறைவாகச் செலவாகும் உபாய முறைகளின் கீழ் பௌதிக முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதற்கு முயற்சி செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(ஐ) பிரீபெய்ட் அட்டை செயற்றிட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனித்து செயற்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றல்ல என்பதுடன், அதற்கு, போக்குவரத்து அமைச்சு முதற்கொண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை, மக்கள் வங்கி, மத்திய வங்கியின் பிரதிநிதித்துவ நிறுவனமாக லங்கா கிலியர் நிறுவனம் மற்றும் அனைத்து நிறுவனங்களும் உட்பட செயற்படுத்தப்படும் செயற்றிட்டமாகும். அவ்வெல்லா நிறுவனங்களும் இச்செயற்றிட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பின் படி இச்செயற்றிட்டம் முன்னொக்கிச் செல்வது தீர்மானிக்கப்படும். நிதிசார் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், அதன் முன்னோடிச் செயற்றிட்டம் 2022 மார்ச் 28ஆந் திகதி காலி- மாகும்புர செயற்படும் தனியார் பேருந்துகளில் செயற்படுத்த முடியுமாயிற்று.

அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவியன் அலுவலக வளாகத்தில் மின்வலு தேவைக்காக சூரிய வுலுவினைப் பயன்படுத்தி சூரிய கலங்களைப் பொருத்தி மின்சாரத்தை உற்பத்திச் செய்யும் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்காக

- N Solar Consultants (Pvt) Ltd மூலம் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையினைத் தயாரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அனுமதியினைப் பெறல் மற்றும்
- சூரிய படல்களைப் பொருத்துவதற்கு கூரையைத் தயார் செய்வதற்குரிய மதிப்பீட்டினை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபத்தினால் தயார் செய்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு அனுமதி பெறல் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருமானம் தொடர்பில் கவனஞ செலுத்தி இக்காலகட்டத்தில் இச்செயற்றிட்டத்தை அமுல் படுத்த முடியாமையால் நிறுவனம் பொருளாதார ரீதியாக நிலையானதாக மாறிய பின்னர் சூரிய கலங்களைப் பொருத்தவதற்கு உரிய கூரையை நிர்மாணிப்பதற்கு மற்றும் செயற்றிட்டத்திற்கு உரிய ஏனைய பணிகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் சபையால் அனுமதி வழங்கப்பட்டது. (பத்திரிகை இல.2021/77 ) இணைப்பு 01

மேலும் மேற்படி 2.4 (அ) பதிலில் குறிப்பிட்டுள்ள, அப்போதிருந்த நிதி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள அனுமதியின் பிரகாரம் இச்செயற்றிட்டத்தின் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.